திராவிடர் வாரத்தாள் 16 பக்கங்கள் விலை அணு 0—1—6

# போர் வாள்

ஆசிரியர்கள் :
காஞ்சி. மணிமொழியார்
ளஞ்செழியன், B A (Hons)

| | உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|---|
| | ஆண்டு சந்தா | ரூ. 5 0 0 | ஆண்டு சந்தா | ரூ. 6 8 0 |
| | 6-மாதம் | 2 8 0 | 6-மாதம் | 3 4 0 |

ாள் 3 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆவனி 11
27—8—49 சனிக்கிழமை | வீச்சு 2

# அஞ்சாநெஞ்சன் வால்டேர்!

[சி. என். அண்ணாதுரை]

இலண்டனும் மாஸ்கோவும்,
ாரிசும் வியன்னாவும், அந்தத்
ருநாளை எழுச்சியுடன் கொண்
ாடின. பெர்லின் நகரிலே
வற்றி விளைவு கோபுர உச்சி
லே, கெம்பீரமாகப் பறக்க
டப்பட்டது, அந்தத் திரு
ளின் கொடி! பல்வேறு நாட்
வரும், தத்தமது நாட்டின்
ன்னாளெனக் கொண்டாடும்
தமாக அமைநதது ஜூலை
-ந் தேதி எனும் புரட்சித் திரு
ள்! ஜூலை 14! உலக வர
ற்று ஏட்டிலே உன்னதமான
டத்தைப் பெற்றுவிட்டது.
ந்நாளை, வீரபிரன்ச்சு மக்க
ன் வெற்றி நாள்! எதிரி நாட்
ன் மீது போரிட்டுப் பெற்ற
வற்றியா? இல்லை! கொடுமை
ப எதிர்த்து, கொடுங்கோலை
கிர்த்து, அன்றுவரை குமுறிக்
ந்த கூட்டம், அந்நாள்வரை
டக்கு முறையினால் தாக்கப்
டு, அடிமைப்பட்டு, 'இம்
ன்றால் சிறைவாசம், ஏன்
ால் வனவாசம்' என்ற

நிலையிலே சிக்கிச் சிதைந்தது, நசுக்கப்பட்டு, நாதியற்றுக் கிடந்த மக்கள், நிமிர்ந்து நின்று, புனல் சொரிந்த கண்களினின்



வால்டேர்.

றும் கனலைக்கக்கி, பெருமூச்சை நிறுத்திப் பெருமுழக்கம் கிளப்பி, தருக்கரின் தாளைத் தொட்டுக் கிடந்த கரங்களிலே வாள் ஏந்தி, விடுதலை! விடுதலை! என்ற புரட்சிக் கீதம் பாடிக் கொண்டு, படைபோல் திரண்டு, இடிபோல் ஆர்ப்பரித்து, புயலெனக் கோபத்தை வீசி, போக போகத்திலே புரண்டு, பொது மக்களைப் பொதிமாடுகளாக்கி அரசியலைக் கொடுமைக் கருவியாகக் கொண்டு, மக்களைக் கசக்கிப் பிழிந்து, அவர் தன்மானத்தை மண்ணெனக்கருதிமிதித்து, செருக்கு நிறைந்த சீமான்கள், எதேச்சாதிகாரம் செய்து வந்ததை ஒரே அடியில், ஒரே நாளில் ஒரே பெரும் புரட்சியிலே, அடித்து நொருக்கி உருத் தெரியாதபடி அழித்த நாள் அந்த ஜூலை 14!

எல்லோரும் இந்நாட்டு மன்னர்! வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா? மகாராசர்கள் உலகாளுதல் நியாயம் எனும் நினைவா? என்ற முழக்கம், கிளம்பின நாள்

(5-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை:

# செவ்வாய் தோஷம்!

சுந்தரவல்லி

"......யானுனை மேவுதற்குத் தாய் சனியாகினளே, ரகுநாத தளசிங்கமே" என்று தன்தாயை மனமாரத் திட்டினாள் ஒரு தலைவி! தன் காதலனோடு கூடுவதற்குத் தடையாயிருந்த காரணத்தால், காதல் உணர்ச்சி தாய் என்றும் பாராமல் அவ்வாறு பேசச் சொல்லிற்று. இது அந்தக் காலத்தில்! அதே நிலையடைந்த கமலமும் இன்று திட்டுகிறாள்-தாயை அல்ல, தடையாயுள்ள "ஜாதகம்" தான் அவள் வயிற்றெரிச்சலுக்குக் காரணமாயிருந்தது. அத்தானை—அன்போடு நேசித்த காதலனை அடையாத வகையில் தடுக்கின்ற காரணத்தால் தான் "யான் உனை மேவுதற்குச் சாதகம் ஓர்சனியாகியதே" என்று வாயார வசைமொழி கூறினாள்.

"வடிவேலு! எப்பொழுதும் நீங்கள் இருவரும் விளையாடிக்கொண்டேயிருந்தால் படிக்கவேண்டாமா? போ! படி! அவளுக்கென்ன? படித்தாலும் படிக்காவிட்டாலும் ஒன்றுதான்! அடுப்படிக்குப் போகிறவள்தானே! நீ நாளைக்குச் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றுகிறவன், போ! போ! படி!" என்றாள் என் தாய்.

"ஏன் அவளுக்கும் தானே படிப்பு வேண்டும்? அடுப்பூதுவது மட்டும்தானா அவள் வேலை? வடிவேலு வேலைக்குப் போய் வரும்போது குழந்தைகளுக்குப் பாடம் கமலாதானே சொல்லித் தரவேண்டும், அதற்காவது அவள் படிக்க வேண்டாமா?" என்றாள் என் அத்தை.

அப்பொழுது எனக்கு வயது ஒன்பது. அவளுக்கு வயது ஆறு. பள்ளிக்கு இருவருமே செல்வோம். ஒழிந்த நேரங்களில் மகிழ மரத்தடிதான் எங்கள் இருப்பிடம். நான் பூப் பொறுக்குவேன். அவள், தலையில் வைத்து விடும்படி சொல்லுவாள். அவளுக்கென்னமோ அதில் ஒரு மகிழ்ச்சி! எனக்கும் அப்படித்தான்! இப்படியாக எங்கள் இன்பப்படகு சென்றுகொண்டிருந்தது. படகு செல்லும்போது புயலும், சுழலும் குறுக்கிடும் என்பதை அறியவில்லை எங்கள் பச்சையுள்ளம்.

பத்தாம் வகுப்பில் வெற்றி. மேலே தொடர வீட்டார் விடவில்லை. தாய்மொழிக் கல்விக்கு அனுப்பப் பட்டேன். ஐந்து ஆண்டுகள் பயின்று முதற்பரிசு பெற்று ஊருக்குத் திரும்பினேன்.

வந்த அன்று மாலை அத்தைவீடு சென்றேன். அத்தை அன்புடன் வரவேற்றும் என் மனம் என்னமோ மகிழ்ச்சியில்லாமலே இருந்தது. காரணம் கமலாவைக் காணாததுதான். 'கமலா எங்கே'? என்று கேட்டும்விட்டேன். 'அவள் வரமாட்டாள்' என்ற விடை வந்தது. இருக்கை கொள்ளவில்லை. வீடு திரும்பினேன்.

"அம்மா! கமலம் எங்கே?"

"அத்தை வீட்டிலிருக்கிறாள்"

"நான் போயிருந்தேன். காணவில்லையே"

"பருவமடைந்தவள் எப்படி வெளியில் வருவாள். திருமணம் முடிந்தபின்புதான் பேசுவாள்!"

மறு பேச்சுப் பேசவில்லை நான், சிறிதுநேரம் சும்மா இருந்துவிட்டு "ஏன் அம்மா நான் ஆசிரியனாக வெளியூர் செல்கிறேனே, அங்கே சாப்பாட்டிற்கு என்ன செய்வது?" என்றேன்.

"அதைப் பற்றித்தான் நானும் எண்ணிக் கொண்டிருக்கிறேன். விரைவில் மணத்தை முடித்துவிட்டால் நல்லது. ஏதோ பார்ப்போம். சரி நேரம் ஆய்விட்டது. வா. சாப்பிடு!"

மறுநாள் எனக்கும் என் தாய்க்கும் அத்தைவீட்டில்விருந்து. அங்கே மணத்தைக்குறித்து ஏதேதோ பேச்சுக்கள் நடந்தன. நான் அதில் கலந்து கொள்ளவில்லை. அன்றிரவு வீட்டிற்கு வந்து விட்டோம். என் தாயின் முகத்தில் வருத்தக் குறிகள் தென்பட்டன.

"அம்மா! திருமண நாள் உறுதி செய்து விட்டீர்களா?

"இல்லையப்பா! உன் ஜாதகம் செவ்வாய் தோஷம் உள்ளதாம். அதே தோஷமுள்ள பெண்ணைத் தான் மணக்க வேண்டுமாம். மீறி நடந்தால் பெண்ணோ ஆணோ இறந்து விடுவார்களாம்! அதனால் நானும் சம்மதிக்கவில்லை. அத்தையும் சம்மதிக்க அஞ்சுகிறாள். யார்தான் சம்மதிப்பார்கள்?"

என் தலையில் இடி விழுந்தாற்போலிருந்தது.

"கமலத்தைக் கேட்டீர்களா?"

"அவளை என்ன கேட்பது? படுகுழி என்று தெரிந்தும் யாரேனும் விழச் சம்மதிப்பார்களா?"

உணவு செல்லவில்லை. எழுந்துவிட்டேன். படுக்கைக்குச் சென்றேன். கண்கள் உறங்க மறுத்தன. தாய் அயர்ந்து விட்டாள். நள்ளிரவில் எழுந்தேன். வேகமாகச் சென்றேன். அத்தை வீட்டின் பின்புறத்தில் வேலியைத் தாண்டி நுழைந்தேன். மனம் படபட என அடித்துக் கொண்டது. கதவைத் தட்ட தைரியம் வரவில்லை. இந்த நிலையில் உள்ளே தேம்பித் தேம்பிப் பெருமூச்சு விடும் ஒலிமட்டும் கேட்டது.

"கமலம்! கமலம்!!" என்றேன். என் பயத்தில் மெதுவாகக் கூப்பிட்டது அவள் காதிலா விழுந்திருக்கும்? என் உடம்பெல்லாம் வியர்த்து விட்டது. உடல் நடுக்கம் அதிகமாயிற்று, சிறிது உட்கார்ந்தேன். கதவு திறக்கும் ஒலி கேட்டது. நெஞ்சு படபட என்று அடித்துக் கொண்டது. உற்று நோக்கினேன். ஓர் உருவம் வெளியில் வந்தது. தலை 'கிர்' என்று சுழன்றது,

உருவம் சிறிது விரைவாகக் காலடியை எடுத்து வைத்தது. எனக்குத் திடீரென்று ஓர் அசட்டுத் தைரியம் பிறந்தது. பின் தொடர்ந்தேன். கிணற்றருகே சென்றது உருவம். யார் என்பதை இப்பொழுதுபுரிந்து கொண்டேன்.

"கமலா!" என்றேன்.

சட்டென்று திரும்பினாள்.

"இந்நேரத்தில் இங்கு எப்படி வந்தீர்கள்?" என்றாள்.

"கமலா! என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டாய்; ஏன் இப்படி......?"

"இது என் தலை விதி. சாதகக் கோளாறு என்னைச் சாகத் தூண்டியது"

(12-ம் பக்கம் பார்க்க)

வாழ்க்கை விளக்கம்:

# அவள் கணவன்!

— ப. தனுஷ்கோடி —

"கணவர்ன்னா என் கணவர் மாதிரி இருக்கணும்! துளிகூடக் கோபமே வரக்கூடாது! எப்ப வேணும்னாலும் பந்து மாதிரி வச்சு விளையாடிக்கொண்டே இருக்கலாம்!"

உள்ளூர்த் தோழியிடம் நாகம்மாள் இவ்விதம் கூறிக்கொண்டிருந்த சொற்கள், மாடியிலிருந்து இறங்கிவந்த நாராயணன் செவிகளில் விழுந்தன. உடனே நல்ல பாம்பு தீண்டியவனைப்போல அவன் முகம் கறுத்தது! திடீரென்று தலையில் பலத்த அடி விழுந்ததைப் போல அவன் சிந்தனை குழம்பியது. ஏனென்றால் அவன்தான் அவள் கணவன்.

அப்போது மாலை ஐந்து மணியிருக்கும். 'காப்பி' சாப்பிட வேண்டியபொழுது அது. ஆனால், தூங்கி எழுந்த முகத்தைக்கூட அலம்பிக்கொள்ளாமல் 'விடு விடு' என்று வெளியே போய்விட்டான் அவன். "நல்ல மாமனார்! பெண்ணைப் பெற்று மிகவும் அழகாகத்தான் வளர்த்திருக்கிறார்! கட்டிய கணவனை அசடாக்கி ஆட்டிவைப்பதுதான் பெண்ணுக்கு அவர் கற்றுக்கொடுத்திருக்கும் பாடமோ? இப்படி இருந்தால் குடும்பம் நன்றாகத்தான் நடக்கும்!" — இப்படி ஓடிக்கொண்டிருந்தது அவன் சிந்தனை.

ஏதோ ஒரு சிற்றுண்டிச் சாலையில் புகுந்தான். பணியாள், நாராயணனின் உடுப்பும் நாகரிகமும் இருந்ததிற்கு ஏற்றபடி எதையோ கொண்டுவந்து வைத்தான். அது அவனுக்கு மாமனார் ஊர். யாரும் பழக்கமில்லை. இருந்திருந்தால் பித்துப் பிடித்தவன்போல் வாரி விழுங்கும் அவனை யாராவது ஆராய்ந்திருப்பார்கள்!

அவனுக்கு மணமாகிய மூன்று மாதங்கள்தான் ஆகின்றன. ஏதோ 'விசேஷத்'திற்காக வந்திருந்தான், அவன் வாழ்க்கை துவங்கிய பின் இதுதான் முதல் தடவை. புதுப் பெண், புகுந்த வீட்டில் வாழும் முறையைச் சொல்லிக்கொள்ள வேண்டிய சமயந்தான் இது. ஆனால் அவள் அவனைப்பற்றி இப்படியா நினைக்கிறாள்? ஐயோ! அவள் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்து மகிழச் செய்தானே, அதன் பலனா இது? அவள் ஆசையாகப் பேசுவது அன்பினால் என்றல்லவோ எண்ணியிருந்தான்! அவளின் கைப்பாவையாகி அசட்டுப் பட்டம் பெறுவதற்கா விழுந்து விழுந்து அன்பைக் கொட்டினான்?

மன அமைதிக்காக நகரத்தின் பூஞ்சோலைப் பக்கம் போனான். அங்கே 'வேதனை'யைத் தரும்படி உடைந்த 'வானொலி' அலறிக்கொண்டிருந்தது. இந்தக் காலத்தில் நல்ல வானொலியை வைக்கும்படி எந்த நகராண்மைக் கழகந்தான் கவனஞ் செலுத்துகிறது?

இசையில் அவன் மனம் பதியாததால் திரும்பவும் அவளைப் பற்றியே எண்ணங்கள் சூழ்ந்தன. பேய் போற் காட்சியளித்தாள் அவள். அகத்தில் சொல்லாமல் ஊருக்குப் போய் விடலாமா என்று ஒரு எண்ணம். ஆனால் வண்டி இனிமேல் கிடைக்காது. அமைதியாக இருந்து விட்டு, காலையில் சொல்லி விட்டே தனியாகப் போய் விடலாமா என்றொரு கேள்வி. ஆனால் அவளை விட்டுப் போவதற்கு என்ன காரணம் சொல்வது? பந்து மாதிரி விளையாட உதவும் பதியை விட்டுப் பிரியத்தான் அவள் உடன்படுவாளா?

வானொலியின் ஓசை நின்று எட்டுமணி 'ஸைரன்' (Cyren) ஒலி முழங்கிய போது, அவனாக எழுந்து வீட்டை நோக்கி நடந்தான். வீட்டு வாசலிலே மாமியும், மகளுமாகக் காத்திருந்தார்கள் அவன் வரவை நோக்கியபடி. ஆனால் அவனைக் கண்டதும் நாகம் உள்ளே போய்விட்டாள். "கணவன் தானே! பேசாவிட்டால் உரிமை எங்கே போய் விடப் போகிறது?" என்ற செருக்கு அவளின் மிடுக்கு நடையில் 'பளிச்' சென்று தென்பட்டது.

ஆனால் மருமகனிடம் மாமி அப்படிச் சொந்தம் பாராட்டி விலக முடியுமா? "என்னங்க! 'காப்பி' கூட சாப்பிடாமல் போயிட்டீங்க?" என்றாள். அவள் குரலில் அன்பும் பரிவும் கலந்துதான் ஒலித்தன. ஆயினும் மனைவியின் போக்கினால் வருந்தும் அவன் மனதிற்கு அது மருந்தாக முடியுமா? எரிக்கும் நச்சாயின, அச்சொற்கள். ஆனால் பதிலொன்றும் பேசாமல் 'மாடி'க்குப் போய் விட்டான். பிறகு "பசியில்லை" என்று இரவு உணவையும் மறுத்து விட்டான்,

* * *

மறுநாள் பந்து தனியாக உருண்டு வர முடியவில்லை. எப்படியோ 'ரகளை' செய்து நாகம்மாளும் கூடவே வந்து சேர்ந்தாள். கள்ளம் கபடமற்ற தன் சாதுவான கணவனை யாரோ என்னமோ சொல்லிக் கெடுத்து விட்டிருக்கிறார்கள் என்று அவளுக்குப் பட்டது. "சூதுவாது தெரியாத கணவன் சொன்னதை நம்பியிருப்பார். அதை வெளிப்படையாகத் தன்னிடம் பேச வலிவின்றி மனதில் வைத்தே புழுங்குகிறார்! அதனால்தான் பேயறைந்தவர் மாதிரி சிரிப்பும், கலகலப்பும் ஒடுங்கிக் காணப்படுகிறார்! எந்தப் பாவி எங்கள் இன்பத்தில் மண்ணைப் போட்டானோ? அவன் கண்ணில் கொள்ளி வைக்க!"—என்ற விதமாக அவளின் இளம் உள்ளத்தில் சொற்கள் ஓடின.

இதனால் நாகம்மாள், கணவன் மீது பன்மடங்கு அன்பும் வருத்தமுங் கொண்டாள். எப்படியாவது அவனை 'குஷி'ப் படுத்தி முன் போலச் செய்து விடவேண்டும் என்று படாத பாடு பட்டாள். உண்மையான அன்பு கொண்டவர்கள் எப்போதுமே வெறுப்பைக் கண்டு அருவருப்படைய மாட்டார்கள். அதைச் சரிப்படுத்தவே முயலுவார்கள். நாகம் அறிவுடைய பெண், பதியின் போக்கைக் கண்டு பதட்டமடைந்து சீறவில்லை. மூலையில் பதுங்கி விதியை நினைத்து

அழவும் இல்லை. தனியாக இருக்கும்போது எப்படியிருக்கிறாளோ? அவன் வரும்போது மிகக் கலகலப்பாகச் சிரிக்கப் பண்ணுகிறாள்!

முன்பெல்லாம் நாள் தவறாமல் மாலையில் மல்லிகைப்பூ வாங்கி வருவான். இப்போது அது அடியோடு நின்று விட்டது. ஆசையிருந்தால் தானே எதுவும் சரிவர நடக்கும்? ஆனால் அதற்காக மற்ற பெண்களைப் போல நாகம் முகத்தைத் தூக்கிக் கொண்டு நிற்க மாட்டாள். வற்புறுத்தி நலம் பெறுவதில் அவளுக்கு நம்பிக்கையில்லை, ஆதலால் அவன் அன்பின்மையை அப்படியே மகிழ்ச்சியாக ஒப்புக்கொள்வதின் மூலம் மனதை மாற்ற முயன்றாள். "என்னடா! நாம் என்ன செய்தாலும் நம்மிடம் இவள் நன்றாகத்தானே இருக்கிறாள்!" என்ற எண்ணம் அவருக்கு என்றாவது ஏற்படும்படி செய்ய வேண்டும். அதுதான் நிலையான கட்டிற்கு வித்தாக முடியும்.

நாராயணன் மனது எப்படியெல்லாம் சுழன்றதோ? எதை நினைத்து வருந்தியதோ! அவளைக் கண்ணால் காண்பதும் நச்சாக இருந்தது, அவள் சாப்பாடு போட்டால் பிடிப்பதில்லை. படுக்கை போட்டால் பிடிப்பதில்லை, அன்று எண்ணை தேய்த்து விட வந்தாள். அது அவனுக்கு எவ்வளவு எரிச்சலாக வந்தது? "எல்லாம் எனக்குத் தெரியும்! நீ தூரப் போ! என்றான். "உங்களை நான் தொடக்கூடாதா? நான் தொட்டுப்போட்டு வைத்த வெந்நீர் மட்டும் பரவாயில்லையாக்கும்!" என்றாள் அவள்! அவனுக்கு இன்னும் கோபம் வந்தது. அது முதல் வெந்நீரில் குளிப்பதையே விட்டு விட்டான்! அந்த மாதிரிபேசியிருக்கக் கூடாது என்று அப்புறந்தான் அவளுக்குப் பட்டது.

பேசாமடந்தைக்காவது ஒரு நாள் 'விமோசனம்' இருந்தது. நாகம்மாள்—நாராயணன் ஊடலைத் தீர்க்க ஒரு வழியும் தோன்றவில்லை, 'பிரேத' நடமாட்டமாகப் போய்க்கொண்டிருந்தது அவர்கள் வாழ்க்கை.

விலக விலக, விழுந்து விழுந்து உபசரிக்க வரும் மனைவியைக் கண்டு ஆச்சரியப்பட்டான் அவன். அவள் மீது வாஞ்சை ததும்பி எழும். ஆனால் அடுத்த கணம், ......ஆ! அந்தப் பந்துச் சொற்கள்? எப்படியாவது மறுபடி வலையில் சிக்க வைத்து ஆட்டி வைக்க வல்லவா பார்க்கிறாள்?

* * *

மீராவோ, சக்குபாயோ அல்ல நாகம்மாள். ஆயினும் அவர்களை விடப் பன்மடங்கு கொடுமைப் படுத்தப் படுவதாக அவள் அன்னைக்குத் தகவல் எட்டியது. உலகத்துக்குத்தான் வேறு வேலையில்லையே! வேலையில்லாதவர்களும் பிழைக்கத் தெரியாதவர்களும், மற்றவர்கள் 'விஷயங்'களில் ஆர்வமுடன் தலையிட்டுக் கொள்வார்கள். நன்றாக உள்ள குடும்பத்தில் பிளவு உண்டு பண்ணுவார்கள். கெட்ட குடும்பத்தைப் பின்னும் கெட வைப்பார்கள. அப்படிப் பட்டவர்களின் பேச்சைத் துணைக் கொண்டு மகளைப் பார்க்க வந்தாள் மாமி, 'பெற்றெடுத்த 'பாச' மல்லவா?'-என்று சொல்லியபடி.

அன்று மாலை. கொல்லைக்குப் போக நினைத்து, புழக்கடைப் பக்கம் போனான் நாராயணன். செடி மறைவில் அம்மாவும் மகளும் பேசிக்கொண்டிருந்தார்கள். 'சட்'டென்று வாயிற்படியோரம் மறைந்துகொண்டு கவனித்தான். ஒற்றுக் கேட்பது தவறுதான். ஆனால் எதற்கும் விதிவிலக்கு உண்டு. இந்த மாதிரியான செய்கையால்—குணத்தால் சில சமயம் நன்மை விளையவில்லையா?

அவனுக்கு மாமியாரின் முகந்தான் தெரிந்தது. 'கண்ணீரும் கம்பலையுமாக இருந்தாள். "என்னடி பெண்ணே! உன் கணவன் உங்கிட்ட சரியா பேசறதுகூட இல்லையாமே! உன் தலையெழுத்து இப்படியா ஆகணும்?" என்றாள் அவள். அது நாராயணனுக்கு நன்றாகக் கேட்டது. "சீ! இந்த மூதேவி என்ன கோள் சொல்லிற்றோ?" என்று நினைத்தான். உடனே அவ்விடத்திற்குப் போய் "ஆமாம்! உங்கள் மாப்பிள்ளை இப்போ, மிகக் கெட்டுப் போயிட்டார்! பத்திரமாக உங்கள் பெண்ணை அழைச்சிட்டுப் போயிடுங்கோ!" என்று கூறலாமா என்று தோன்றியது.

ஆனால் அடுத்த கணம் நாகம்மாளின் சொற்கள் அவன் காதில் விழுந்து திடுக்கிட வைத்தன. சிரிப்பும் கொம்மாளமும் சேர்ந்து வழிய, "என்னம்மா! அவரைப் பார்த்தா அப்படியா உனக்குத் தோணுறது? யாரம்மா உனக்குச் சொன்னா? இவர் எனக்குக் கிடைச்சது 'பூர்வ ஜன்ம பாக்கியம்' என்றல்லவோ நான் எண்ணிக்கொண்டிருக்கேன்: எனக்கு இங்கே என்ன குறைச்சல்?" என்றாள். ஆச்சரியம்! அவளா இப்படிப் பேசுகிறாள்? அவள் பேச்சைவிட, கலகலப்பாக ஓடியாடியதுதான் அதைவிட நம்பிக்கை யளித்தது. அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. எவ்வளவு துன்பப் பட்டாலும் அதைப் பிறந்த வீட்டில் காட்டிக்கொள்ளாமல் இருப்பதுதான் பெண் குணமா? இல்லை! எல்லோருக்கும் இப்படிப் பரந்த அறிவு இருந்துவிடாது. நாகம்மாளைப் போன்ற ஒரு சில நல்லவர்களுக்குத்தான் அத்தகைய அறிவு இருக்கும்.

மிகவும் மோசமானவள் என்று நினைத்திருந்த மனைவி மிக உத்தமமானவள் என்றறியும்போது அவனுக்கே வெட்கமாக இருந்தது. பேசாமல் வீதி வாசலை நோக்கி நடந்தான். அவன் சிந்தனை இப்போது மகிழ்ச்சிக் கோட்டையை இயற்றிக் கொண்டிருந்தது.

இரவு உணவிற்கு வரும்போது நாராயணான் மலர்ச் 'செண்டு'டன் வந்தான். இப்படி அவனைக் கண்டு நான்கு மாதங்களாகின்றன நாகம்மாளுக்கு. மாடிப் படி ஏறிக் கொண்டே ஆர்வம் ததும்ப "நாகம்! நாகம்!" என்றழைத்தான். மான் குட்டி போல துள்ளிக் குதித்து ஓடி வந்தாள் அவள்.

"இத்தனை நாட்களாக நான் ஏன் பூ வாங்கி வருவதில்லை, தெரியுமா?" என்று ஆசை ததும்பக் கேட்டான் அவன். அவன் அணைப்பின் கதகதப்பில் அப்போது இன்பமாக ஒன்றியிருந்தாள் அவள். அவளிடம் எல்லாவற்றையும் விவரமாகக் கூறிவிட வேண்டும் என்று அவன் மனம் துடித்துக்கொண்டிருந்தது. ஆனால் ஏன்? என்று கேட்பதற்குப் பதிலாக, "தெரியுமே!" என்றாள் அவள். அதனால் "எப்படி?" என்று அவனே கேட்கவேண்டியதாயிற்று.

"மார்க்கெட்டில் மல்லிகைப் பூ விற்கும் காலம் மாறிப் போயிருக்கும். அதுதான் இத்தனை நாள் வாங்கி வரவில்லை" என்றாள்.

நாராயணன் மனதில் அதி

(12-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ழுகாரி முடிந்து அடாணு ஆரம்பமான நாள்! மாடப்புரு வல்லூறைத் துரத்திய நாள்! மன்னர் மருண்ட நாள்! சீமான்களின் தலை சிதறிய நாள்! மதுக்கிண்ணமேந்திய மனோஹரிகளின் இதழ் தரும் சுவையிலே இகத்தின் ரசத்தைக்கண்டு, பரலோகரசம் பாதிரி மாரின் கைவசம் இருக்கிறது, கேட்டால் கிடைக்கும். அதற்காகத்தேடி அலைவானேன் என்று மதோன்மத்தர்கள், அரண்மனைச் ' செல்லப் பிள்ளைகள், ஆணவ சொரூபங்கள் ஆடிப்பாடிக்கிடந்த கோலாகலத்தை—வேரறுத்த நாள்! ஒடப்பரெல்லாம் உதைப்பரான நாள்! விலங்கு பூட்டப்பட்டு வேதனையை அடைந்த ' கரங்களிலே வீரவாள் ஜொலித்தாள்! விடுதலை நாள்! வீரரின் வெற்றித் திருநாள்! வெறியரின் வீழ்ச்சி நாள்! விழா! ஊரெங்கும், உலகமெங்கும்! உணர்ச்சியுள்ளவருக்கெல்லாம் உத்தம நாள்! அந்த ஜூலை 14-ந் தேதி! வீதிகளிலே ஜனம்! வீடுகளே பாசறை! கையில் கிடைத்ததெல்லாம் ஆயுதம்! காணும் கொடுமைகளெல்லாம் தவிடுபொடி! திட்டம் உண்டா? தீட்ட நேரமில்லை! மந்திராலோசனை உண்டா? அதற்கான மனப்பான்மை இல்லை, சமயமறிந்து நடக்க வேண்டும் என்ற எண்ணமாவது உண்டா? இத்தருணம் தவறினால் மறு தருணம் வாய்ப்பதரிது என்று யாவரும் கூறின நேரம் அது. அணிவகுப்பு? இல்லை! அவனைக் கேள், இவனைப்பார், அவனைக் கூப்பிடு, என்ற பேச்சு இல்லை! வேறு என்ன உண்டு! வெட்டு! குத்து! இடி! கொளுத்து! கொல்! இந்தச்சத்தமே எங்கும்! மாளிகைகள் இடிந்து சரசரவெனச் சரியும் சத்தம், கட்டடங்களிலே தீ மூட்டிவிட்டதால் கிளம்பும் சத்தம்! இவைகளை மீறிக் கொண்டு, பாஸ்டில்! பாஸ்டில்! என்ற பெருஞ்சத்தம்! ஆம் ஜூலை 14, பாஸ்டிலி தினம், பயங்கர பாஸ்டிலி படுசூரணமான தினம்! பதைத்தெழுந்த பாமர மக்கள் தங்களை அன்றுவரை பயங்கரமான கொடுமைகளுக்கு ஆளாக்கி வைத்த பாதகச் சிறைக்கூடமான பாஸ்டிலியை இடித்துத் தூளாக்கி, மண்மேடாக்கிய நாள்! அந்தச் சிறைச்சாலையைச் சீற்றம் கொண்ட மக்கள், சிதறடித்த நாளையே, இன்று, பாரிசில் மட்டுமல்ல, பெர்லினில், மாஸ்கோவில், இலண்டனில், பல்வேறு நகர்களிலே கொண்டாடினர். ஜூலை 14ந் தேதி பிரான்ஸ் நாட்டு மக்கள், தங்கள் நாட்டிலே இருந்த பயங்கரச் சிறைச்சாலையான பாஸ்டிலியைத் தகர்த்தனர் என்ற போதிலும், அந்த நாளைக் கொண்டாடும் உரிமை, எனக்குமுண்டு என்று கூறிக்கொள்ளாத நாடு இல்லை! ஒரு நாட்டின் நாள், உலகப் பொது நாள் ஆகிவிட்டது! பாஸ்டிலி பிரான்சிலே வீழ்ந்தது, என்ற உடனே ஒவ்வோர் நாட்டிலேயும் உணர்ச்சி பொங்கி எழுந்தது! ஏன்? பாஸ்டிலி, பிரன்ச்சு நாட்டுச் சிறைக்கூடம்! பாரிசில் கட்டப்பட்டிருந்த பாதகப் படுகுழி! பாமரரைச் சித்திரவதை செய்யும் கொலைக்களம்! அது அன்று அழிந்தது. அந்தச் செய்தி, உலகெங்கணும் கொடுமைக்கு ஆளாகி இருந்த மக்களுக்கெல்லாம், தத்தமது நாட்டிலே உள்ள பாஸ்டிலிகளும் தொலையும் நாள் வந்துவிட்டது என்ற ஆவேசத்தை ஊட்டிற்று' அக்ரமக்காரரை, விழித்தெழுந்த மக்கள், வீரத்தால் வீழ்த்தினர் என்ற செய்தி கேட்டதும், நாட்டுக்கருகே உலவிய புலி கொல்லப்பட்ட செய்தி கேள்விப்பட்டதும், நாட்டிலே ஒவ்வொரு வீட்டிலும் மகிழ்ச்சி உண்டாவதுபோல, உலகிலே நாகரிக உணர்ச்சி படைத்தவர் அனைவருக்கும், ஓர் மகிழ்ச்சி எழுச்சி! ஒழிந்தது பாஸ்டலி, ஒழிந்தது கொடுமை!! என்று பல்வேறு நாட்டு வீரரும் கூவினர்! பாஸ்டிலியின் அழிவு, பிரான்சிலே மட்டுமல்ல, பல்வேறு நாடுகளிலேயும் நாசத்தைக் கக்கிக்கொண்டு கிடந்த நயவஞ்சகனின் ஆட்சி வீழ்ந்துவிடும், வீழும் நாள் விரைவிலே உண்டு என்ற எண்ணத்தை ஊட்டும் இலட்சிய வாடையாகிவிட்டது! அந்தப் பிரன்ச்சுப் புரட்சி, பிரபஞ்சப் புரட்சிக்குப் பேராசிரியராக வரவேற்கப்பட்டது. ஜூலை 14, ஒரு நாட்டிலே இருந்த ஒரு சிறைக்கூடத்தின் வீழ்ச்சி நாள் அல்ல, செல்வச் செருக்கு எனும் சிறைக்கூடம் எங்கெங்கு காணப்பட்டதோ அங்கெல்லாம், வீழ்ச்சி, இறுமாப்புக்கு இறுதி எச்சரிக்கை விடுத்திடும் வீரர் விழிப்புற்ற நாளாயிற்று.

"ஏ! மனிதப்பதரே! மண்டியிட்டு வாழவேண்டிய மாமிசப் பிண்டமே! அடிமையே! கட்டளையிடுகிறேன். யோசிக்கிறாயே என்ன? நட என்று கூறுகிறேன், நிற்கிறாயா இன்னமும்?" என்ற எக்காளம் மிகுந்திருந்த காலம், மாளிகைகள் பிறப்பித்த கட்டளைகளை மண் குடிசைகள், சிரமேற்கொண்டகாலம். மன்னனே சீமான்களின் சதுரங்கக்காய், சீமான்களோ சிருங்காரிகளின் சிறுவிரலிலே, பெருநெறியைக் கண்டவர்கள்! சிருங்காரிகளின் ஆயுதங்களோ சிற்றிடை, சிவந்த அதரம், கடை சிவந்த கண்கள், கனிரசக்கலசங்கள், கீதக்குரல், நடன நடை,......இந்த நிலையிலே கிடந்த நாட்டிலே, பஞ்சம் பசி தீர்த்துக் கொள்ளும் பாமரரின் உயிர் குடித்து!

பாவையர் வாழுவர் பாதிராத்திரிப் பசியை அடக்கும் பாதகத் தொழிலுக்குத் தங்களைத் தத்தம் செய்து! வரிகொடுப்பர் ஏழை மக்கள்—வாங்கிக் குவிப்பர் அரசியலார்! வேலை செய்வர் கூலி மக்கள்—கேளிக்கை தேடி அலைவர் சீமான்கள்! ஒய்யாரியின் ஓயாச்சிரிப்பு! உல்லாசியின் சல்லாபம்' இவையே கலை! கட்டழகியின் கண்ணைக் கண்டே காவியம் தீட்டப்படும்.

சீமான்களிடம் வரிகேட்கும் "சிறுமதி" மன்னருக்குக் கிடையாது! பூமான்களின் புன்னகை போதாதா பூபதியின் அரண்மனைக்கு ஒளிதர! 'பஞ்சைப் பயல்களால்' வரி தருவது தவிர வேறென்ன தரமுடியும், நாட்டை ஆளும் பாரத்தை நாதன் துணை கொண்டு தாங்கும் மன்னருக்கு! எனவே ஏழை பாரியாவான், பாரி பட்டினியால் சாவான்! இலட்சாதிகாரி கோடீஸ்வரனாவான். கோடீஸ்வரன் கோமளவல்லிகளின் கொவ்வை இதழுக்காக, எதையும் தருவான்! இதுவே பிரான்ஸ் பாஸ்டிலி வீழ்ச்சிக்கு முன்பு!

"இப்படியும் வதைவதா?" என்று கேட்கும் துணிவு எவனுக்கேனும் பிறந்தால், பாஸ்டிலி!! அரண்மனையிலே செல்வாக்குள்ள யாருடைய கோபமாவது எவன் மீதேனும் பாய்ந்தால், பஸ்டிலி! வரிக்கொடுமை பற்றிப் பேசினானா? பாஸ்டிலி! வனிதாமணியைக் கேலி செய்தானா? பாஸ்டிலி! சீமான்களின் சீற்றம், அந்தச் சிறைச்சாலைக்குத்தான் பாமரரைத் துரத்திற்று. அங்கே இருந்தது என்ன? இரும்புக் கம்பியும் கம்பளிப் போர்வையும் மட்டுந்தானா? இல்லை! பகலிலே இரவு! பாதாளத்திலே அறைகள்! காற்று வெளிச்சம், தண்ணீர், உணவு, தாராளமாக உண்டா? இல்லை! சிறை அதிகாரிகளின் கடமை என்ன? சித்திரவதை! எவ்வளவு அதிக நாட்களுக்குச் செய்ய முடியுமோ, அவ்வளவு காலம் கைதியின் உயிர் ஊசலாடிக் கொண்டு இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்!!

பாஸ்டிலி என்ற பெயரைக் கேட்ட உடனே, பயத்தால் அலறுவர்! அங்கே போனவன், திரும்பிவருவது உண்டா? அக்கினிக் குழம்பிலே போட்டாலாவது அரை நொடியிலே சாவு நிச்சயம், அதுவரை தான் வேதனை. பாஸ்டிலியிலே, ஆயுள் பூராவுமல்லவா அக்னிக் குழம்பு அங்கமெலாம் ஊற்றப்படும், என்று கூறிக் கதறுவர். விசாரணையின்றி, மன்னிப்பு இன்றி, நோய்வந்தால் கவனிப்பு இன்றி, அங்கம் பழுதானால் கேட்பாரின்றி, உடல் அழுகித் தானாக உலர்ந்து, உயிர் ஒவ்வோர் துளியாகப் பிரியத் தொடங்கி, அவன் எலும்புக் கூடாகி கண்பார்வை இழந்து, கைகால் முடக்கப்பட்டு, உடலிலே கடித்துக்கொண்டிருக்கும் உணியை ஓட்டவும் சக்தியற்று, அவனைக் கண்ணால் பார்ப்பதே பார்ப்பவனுக்குத் தண்டனை என்று கூறத் தக்க உருவமாக மாறி, மரணத்துக்குத் தவம் கிடந்து, பிறகு மண்ணிலே புதைவான்! அந்தப் பயங்கர பாஸ்டிலியிலே வாலிபன் வயோதிகனானான், வீரன் வெறியனானான், புத்திமான் பித்தனானான், வடிவழகன் அழுகு நோயனானான்! அடக்குமுறையின் முழுமூளைத்திறமும் உபயோகிக்கப்பட்டு நிர்மாணிக்கப் பட்ட இடம் அந்த பாஸ்டிலி! கனத்த சுவர்கள், அவைகளை அணைத்துக்கொண்டு ஆழமான அகழிகள், இருப்புப் பலகைகளாலான கதவுகள், இமைகொட்டாது காவல் புரியும் கொடியவர்; இது பாஸ்டிலி! எவ்வளவு அநீதி இழைக்கப்பட்டாலும் ஏன் என்றுகேட்க எவரும் துணியார், அவர்களின் செவியிலே பாஸ்டிலி என்ற சத்தம் வீழ்ந்ததும்!

அந்தப் பாஸ்டிலி வீழ்ந்தது ஜூலை 14ல்! அவனி களிப்படையாது இருக்குமா?

பதினாறும்லூயி, பிரான்சை ஆண்டு வருகிறான். பட்டத்தரசியின் சுட்டுவிரலுக்குக் கிட்டே வருபவருக்கே அரண்மனைத் தயவு! மக்கள் உள்ளமோ கொதித்தது. ஆனால் எரிமலை கக்கத் தொடங்கவில்லை, பாஸ்டிலி என்ற பயம், எரிமலைக்குமேல் மூடியாகக் கிடந்தது. கர்த்தனின் கருணையைக் காசுக்கு விற்கும் தரகர்கள், காமத்தால் கருத்தழிந்த சீமான்கள், கவலையால் கருத்துக்குழம்பிய மக்கள்! சீமான்களோ வரி செலுத்துவதில்லை. வரி கேட்கும் நெறியே தவறு!! சீமான் என்ற பட்டத்துக்குத்தான் வேறு என்ன அர்த்தம்? சாதாரணமானவனும் வரிகட்டுவது; சீமானும் கட்டுவதா? பண்ணை உண்டு, பாடுபடக் கூலிகள் உண்டு, அவர்கள் தேடிக் குவித்த பொருளை ஆடிப்பாடிச் செலவிடப் பாரிஸ் உண்டு! பாரிசில் பாகுமொழிப் பாவையர் உண்டு! செல்வவான்கள் உண்டு: அன்னக்காவடிகளுக்குப் பட்டினி உண்டு! ஏழுலட்சத்து ஐம்பதினாயிரம் மக்கள் கொண்ட பாரிசில், பசியோ பசி என்று பதறியமக்களே பெரும்பான்மையினர். 1774-ல், இந்தப் பிரான்சுக்கு மன்னனானான் பதினாறாவது லூயி. நல்லவன், யோக்யன், பக்திமானுங்கூட. ஆனால், ஆளத் தெரியாத ஆணழகன் அந்த லூயி. பட்டத்தரசி மேனா மினுக்கி அவளைச் சுற்றி ஜொலித்த மாதர்கள், உடல்குலுக்கி ஊரை அழைக்கும் உல்லாசிகள்! அரண்மனையிலே ஆனந்த அமளி, வெளியே வேதனைப்புயல்! இந்நிலையிலே, அரசாங்கத்தை நடத்

தப் போதுமான பணம் இல்லை எப்படி இருக்கமுடியும்? அரண்மனையிலே, சுரண்டிப்பிழைக்கும் சுந்தரிகளும் சோம்பித் திரியும் சொகுசுக்காரரும் நடமாடினர். பாரிதரும் வரிப்பணம், பரிபாலனச் செலவுக்கு—அதிலும் பளிங்குக்கிண்ணத்திலே பலவித மது ஊற்றி, வைரமோதிரக் கையினள் பொன்னுடை பூமானுக்குப் பூரிப்புடன் தரும் விருந்து வைபவங்கள் நடைபெற வேண்டுமே, அத்தகைய பரிபாலனச் செலவுக்குப் போதுமா? பாவையர்மீது சீமான்கள் கொண்ட மோகத்தைப் போலப் பணம் வளருமா? பணம் இருக்கும் இடம், மாளிகைகளில், பண்ணைகளில்! அவர்களோ மன்னரின் அன்புக்குப் பாத்திரமானவர்கள். வரி தரும் வேலை கிடையாது. ஏழை மட்டுமே தந்துஎந்த அரசாங்கத்தைத் தான் நடத்தமுடியும்? பணம் இல்லை •பரிபாலனச் செலவுக்கு!!

சர்க்காரைச் சீர்திருத்த முயன்றவர்களிலே ஒருவர், பிரான்சைப் படம் பிடித்தார்! "பிரான்ஸ், ஒரு ராஜ்யம் அல்ல பலப்பல தனித்தனி ராஜ்யங்களின் கதம்பம்! ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லை, எல்லாவற்றுக்கும் பொதுவான நிர்வாக யந்திரம் இல்லை! பல வட்டாரங்கள் வரி செலுத்துவதே இல்லை. சில இடங்கள் வரி செலுத்திச் செலுத்தி வறண்டுவிட்டன, பணக்காரர்களுக்கு வரிச்சுமை மிக மிக இலேசாக இருக்கிறது, ஏழையின் இடுப்பே முறிகிறது; சீமான்கள் அனுபவிக்கும் அதிகார பாத்யதையால் சமுதாய அமைப்பிலே சழ எடை கெட்டுவிட்டது; மிகமிக மோசமான ராஜ்யம். ஊழல் அமோகம்." "சரி! படம் பிடித்தது சரிதான். ராஜ்யம் மோசமாக இருக்கிற காரணத்தால் தானே உம்மை அமர்த்தினேன், ஒழுங்குபடுத்த" என்று யாரேனும் கூறிவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சி போலும், அந்த ஆசாமி, பிரான்சின் நிலைமையைக் கூறிவிட்டு, "**இன்றுள்ள நிலையிலே இந்த ராஜ்யத்திலே ஆட்சி செய்வது ஆகாத காரியம்**" என்று தீர்மானமாகக் கூறிவிட்டார். ஐரோப்பாவின் பூந்தோட்டம் பிரான்ஸ்! அங்கு பணம் இல்லை, துரைத்தனம் நடத்த! பணம் படைத்த சீமானுக்கோ மனம் இல்லை வரி செலுத்த! அந்தச் சிறு கூட்டத்தை அடக்கவோ திறனில்லை மன்னனுக்கு! மதியுரைக்க மந்திரி இல்லை! மக்களுக்கோ பாஸ்டிலி இருந்தது!!

பிரான்ஸ்நாட்டு ராஜரீகத்தை நடத்த முடியாது என்று கூறியும் விட்டார், ஒரு பிரமுகர். மன்னர் ஏதேதோ செய்து பார்த்தார். மந்திரிகளைப் புதிது புதிதாக நியமித்தார், அவர்கள் புதுப் புதுத் திட்டங்கள் தீட்டினர், பலன் இல்லை! கடைசியிலே கதிகலங்கிய காவலன் புயலைத் துணைக்கு அழைத்தான்! மக்கள் மன்றத்தைக் கூட்டினான்!! மக்கள்—மன்னரால் கைவிடப்பட்டுக்கிடந்த மக்கள்—கூடினர்! கவலைதோய்ந்த முகத்தினருக்கும் கொஞ்சம் களிப்புப் பிறந்தது. மக்களே மன்னர் நாடுகிறார் ஏன்? **நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்!**—என்ற தத்துவம் கோழை நெஞ்சிலே குடைந்து சென்றது. நிமிர்ந்து நின்றான்! தூங்கினதுபோதும்! தோள்தட்டு என்று உணர்ச்சி உரைத்தது. குகையைவிட்டுப் புலி கிளம்புவதுபோல், கிளம்பினர். எரிமலை குமுறத் தொடங்கிற்று! மக்கள் மன்றத்தினர், துரைத்தனம் நடத்தும் திட்டம் தயாரித்தனர் விடுதலை என்றமையிலே புரட்சி என்ற பேனாவைத் தோய்த்து எடுத்து! சீறிடும் சீமான்களைக் கண்டு சிரித்தனர், மன்னனை மறந்தனர், அரசாளப் பிறந்தவர் அவர் மட்டுமா, பிரான்சு நாட்டவர் அனைவருமே அரசாளப் பிறந்தவர் என்று ஆர்ப்பரித்தனர்! 1789-ம் ஆண்டு ஜூன் பத்தாம்தேதி, மக்கள் மன்றம், "தேசிய மகாசபை இது. இந்நாட்டுக்குத் தக்கதோர் ஆட்சிமுறைத் திட்டம் வகுத்து அமுலுக்குக் கொண்டு வராமுன்பு, இந்தச் சபை கலையாது" என்று கூறிவிட்டது! அரண்மனையிலேமன்னன், அன்னக்காவடிகள் அரசாள நாங்கள் வழி அமைத்துத் தருகிறோம் என்று கூறுகின்றனர் வெளியே!!

அரண்மனைக்குள்ளே ஆர்ப்பாட்டக்காரர் கூடினர். அரசனுக்குத் தூபமிட்டனர். அதிகார வெறியரை ஏவிவிட்டனர். துருப்புகள் பவனிவரத் தொடங்கின, புயல் வலுத்தது!

"போக்கிரிகளைச் சுட்டுத் தள்ள வேண்டும்"

"காலாடிகளிடம் நாட்டை விட்டு விடுவதா?"

"பிடித்துத்தள்ள வேண்டும் பாஸ்டிலியில்"

"துருப்புகளுக்கு உத்தரவு பிறப்பித்தால் வெறிநாய்களைச் சுட்டுத் தள்ளமாட்டார்களா!"

"மன்னனை மதிக்காமல் மமதையோடு கூவும் இந்தமக்களைக் கண்டும் நாம் சும்மா இருப்பதா"

"மானம் போகிறதே"

"பரம்பரைக் கௌரவம் பாழாகிறதே"

"கிளம்புவோம், சிதறடிப்போம்"

சீமான்கள் சிலர் கூடினர் அரண்மனையில்; ஆணவத்தை இதுபோல் கக்கினர் — கடைசி முறையாக! ஆளத்தெரியாத மன்னன், மக்களின் ஆத்திரக் கடலைக் கடக்க இந்த மண் குதிரைமீது ஏறிக்கொண்டான். மக்களைக் கூட்டிய மன்னன், பிறகு, அவர்களைக் கடுமையான முறையினாலே அடக்குவது என்ற விபரீத எண்ணம் கொண்டான். புயலை எதிர்த்தான்! சீறும் காலத்தின் முன்பு சிறுபிள்ளையாட்ட மாடினான்!

(11-ம் பக்கம் பார்க்க)

★ போர்வாள் ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆவணி 11
27—8—49 சனிக்கிழமை

## வேண்டாம் விஷப் பரீட்சை!

பண்டித நேரு, சர்தார் படேல், ராஜேந்திர பிரசாத், முதலிய "பெரிய பிரங்கிகள்" இடியோசையெனத்தகும் பெரு முழக்கத்துடன் பிரச்சார குண்டுகளை சரமாரியாக வீசியுங்கூட, அவற்றின் அதிர்வேட்டு ஒலியைக்கண்டு அணுவளவும் அஞ்சாது, நிமிர்ந்து நின்று போராடி, கல்கத்தா தேர்தலில், காங்கிரஸ் கட்சியை ஓடஓட விரட்டியடித்த மாவீரர் — தீரர் நேதாஜியின் தமையனார்—எஃகு உள்ளம் படைத்த ஏந்தல் — வங்கம் தந்த சிங்கம், தோழர் சரத் சந்திர போஸ் இந்த வாரம், கல்கத்தா பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில், பயங்கரத் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார். மத்திய சர்க்கார், டில்லி நகரத்தை தமது நேரடி நிர்வாகத்தின்கீழ் வைத்துக்கொண்டிருப்பதைப்போலவே சென்னையையும் வைத்துக்கொள்ள சூழ்ச்சித் திட்டம் ஒன்றை உருவாக்கியிருப்பதாகவும், இதனை, தான், வெறும் யூகத்தின்மீதோ ஆதாரமற்ற வதந்திகளை நம்பியோ கூறவில்லையென்றும், இதுபற்றிய திட்டவட்டமான தகவல்கள் தன்னிடம் இருப்பதாகவும் சரத் சந்திரர் தெரிவித்துள்ளார்.

தீரர் சரத் சந்திர போஸ் இவ்வளவு அழுத்தம் திருத்தமாக அறிவித்திருக்கிறார்—அவரோ பொறுப்புள்ள கண்ணியவான் — இட்டுக்கட்டிக் கூறுவதிலோ கற்பனையுரைகளை நவில்வதிலோ பழக்கமோ பயிற்சியோ இல்லாதவர்—வீண் உரைகளைக் கூறுதவர், வெறும் பேச்சுப் பேசும் வழக்கம் இல்லாதவர்—எனவே அவருடைய இந்த அபாய அறிவிப்பை வெறும் வதந்தி என்று யாரும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. அவருடைய இந்த உரையிலே உண்மை இருக்காது என்று அவருடைய நேர் அரசியல் எதிரிகளும்கூட கூற மாட்டார்கள்.

என்றாலுங்கூட, நாம், நாம் மட்டும்தானா, இல்லை இல்லை, இரண்டரை கோடி தமிழர்கள் அத்தனை பேருமே, இந்தத் தகவல் உண்மையாக இருக்கக்கூடாது என்றே ஆசைப்படுகின்றோம்.

ஒருக்கால் இந்திய சர்க்காருக்கு, சென்னையை, தங்கள் திருப்பாத கமலங்களில் இரண்டற இணைத்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் எந்தக் காரணத்தாலாவது இப்போது ஏற்பட்டு இருக்குமானால்கூட, அந்த எண்ணத்தை அவர்கள் உடனடியாகக் கைவிட்டுவிடவேண்டும் என வேண்டிக் கொள்கிறோம்.

நிச்சயமாக அவர்கள் சென்னை நகரை தமிழகத்திலிருந்து அபகரித்துக் கொள்ளும் அநீதியான ஏற்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவரத் துணியமாட்டார்கள் என்றே நம்புகிறோம்.

தமிழர்தம் சென்னையை அள்ளி விழுங்கி ஜீரணித்துவிட எண்ணுகிறார்கள் மத்திய சர்க்கார் என்னும் இந்தப் பேச்சு சிலபல நாட்களாகவே அடிபடுகிறது என்றபோதிலும், இப்போது இந்த எண்ணம் மத்திய சர்க்காருக்கு இருப்பது ஒரு பொறுப்புள்ள தலைவரின் சொற்பொழிவு மூலமாகவே உறுதிப்படுகிறது என்ற போதிலும், இந்தப் பேச்சுகளெல்லாம் வெறும் வதந்திகளாகவே போய்விடவேண்டும் என்பதே தமிழகத்தின் ஏகோபித்த எண்ணம்.

ஆனால், உண்மையாகவே, மத்திய சர்க்காருக்கு இந்த எண்ணம் இருந்து, உண்மையாகவே, அவர்கள் 'சென்னை' நகரை தமிழ்நாட்டிலிருந்து துண்டாடி தங்கள் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர நடைமுறையில் முயலவும் செய்வார்களானால், நாம் முன்கூட்டியே அழுத்தம் திருத்தமாக எச்சரித்துக் கூற ஆசைப்படுகிறோம், மத்திய சர்க்காரின் அத்தகைய கபோதித் தனமான முயற்சியின் விளைவு மிகவும் பயங்கரமானதாகவே இருக்கும்.

'சென்னை, தமிழருடையது. தொன்று தொட்டு, தமிழகத்தின் ஓர் உறுப்பாக அமைந்திருக்கும் சிறப்பும் பெருமையும் படைத்தது இந்த நகர். தமிழகம் தனி மாகாணமாக அமையும்போது அதன் தலை நகரம் சென்னையாகத்தான் இருக்கும். சென்னையிலே சென்ற சில பல ஆண்டுகளாக ஆந்திர நண்பர்கள் சிலரோ பலரோ விருந்தாளிகளாக வந்து குடியேறியிருக்கலாம். ஆனால் அந்தக் காரணத்தால் சென்னை அவர்களுடையதாக ஆகி விடாது. வெள்ளையர் கூட்டம் மூன்று நூற்றாண்டுகள் இந்தியாவில் வந்து கூடாரம் அடித்திருந்த காரணத்தாலேயே இந்தியா எப்படி அவர்களுடைய சொத்தாக ஆகிவிடாதோ அப்படித்தான் ஆந்திர அன்பர்கள் சிலபல ஆண்டுகளாக இங்கு வந்து குடியேறியிருப்பதுகாரணமாக சென்னை அவர்கள் சொந்த சொத்தாகி விடாது. வரலாறு, இலக்கியம், ஜனத்தொகை, அரசியலார் ரிகார்டுகள், நேரிடை அனுபவம், இன்றைய நிலை ஆகிய எந்த ஆதாரங்களைக் கொண்டு அலசிப் பார்த்தாலும் சென்னை தமிழருடையதுதான் என்னும் உண்மையை யாரும் மறுக்கமுடியாது.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சென்னை தமிழருடையதுதான் என்பதை தீர்மான வடிவிலே ஏற்கெனவே பொறித்துவைத்திருக்கிறது.

தமிழ்நாடு—ஆந்திர கம்யூனிஸ்ட்கள் சென்னை தமிழருடையதே என்பதை ஒரு கூட்டு அறிக்கை மூலம் முன்னரே தெரிவித்திருக்கின்றன.

திராவிடர் கழகமும், இதே கருத்தைத்தான் கொண்டிருக்கிறது.

"மொழிவாரியாக, ஆந்திரம்—தமிழகம்— கேரளம் — கர்நாடகம் என்று அரசுகள் அமையவேண்டுமென்பதையும், அங்ஙனம் அமையும் அரசுகள், தமக்குள், ஓர் கூட்டாட்சி முறை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் வடநாட்டுச் சுரண்டலிலிருந்து தப்பி, வளத்துடன் வாழவேண்டுமென்பதையுமே திராவிடர் கழகம்வலியுறுத்திவருகிறது. ஆனால் 'கூட்டாட்சி தேவை என்' காரணத்தால், ஆந்திரர்கள் அடா

கூறும் "மதராஸ் மனதே" போன்ற கூச்சலைக் கீதமாகக் கொள்ளவோ, சென்னையை ஆந்திரத்துடன் சேர்த்து விடவோ திராவிடர் கழகம் ஒருபோதும் இசையாது. கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கும் கதை போலாகும் சென்னையை ஆந்திரருக்கும், மற்றும் பல்வேறு இடங்களிலே பல்வேறு மொழியினருக்கும் கொஞ்சம் கொஞ்சமாகக் 'தானம்' தந்துவிட்டு தமிழகம் தேய்ந்து, பிறகு, கூட்டாட்சி நடத்த முனையும் காரியம்."

என்று "**திராவிடநாடு**" 21-9-47 லேயே, இப்பிரச்சினையில் திராவிடர் கழகத்தின் கருத்து யாது என்பதைத் தெளிவாக விளக்கியிருக்கிறது.

அதுபோலவே நம் "**போர்வாள்**" இதழிலும், நாம் 13-9-47 அன்று, "தமிழகத்தின் எல்லை வடக்கே வேங்கடம், தெற்கே குமரிமுனை. வரலாறு, மொழி, மக்கள்தொகை, வாழ்க்கை வழி, பண்பாடு, பழக்க வழக்கம் முதலிய எந்த அளவு கோலைக் கொண்டு அளந்து பார்ப்பதாயினும் தமிழ்நாட்டின் எல்லை இதுவாகத்தான் இருக்கமுடியும். எனவே சென்னை எவருடையது என்ற பிரச்சினைக்கே இடமில்லை— அது தமிழருடையதுதான். நிச்சயம் தமிழருடையதுதான். ஆனால் நம் ஆந்திர நண்பர்களில் ஒரு சாரார் சென்னையில் ஒரு பகுதி தங்களுடையது என்று வாதாடுகின்றனர். இன்னொரு சாரார், பகுதி மட்டுமல்ல, சென்னை முழுவதுமே தங்கள் தரணியில் இணைக்கப்பட வேண்டும் என்று முழங்குகின்றனர். மற்றொரு சாரார், சென்னை மட்டுமல்ல செங்கல்பட்டு வடார்க்காடு சேலம் மாவட்டங்களிலும் சிற்சில பகுதிகள் எங்களுக்குச் சொந்தம் என்று வல்லடி வழக்குச் செய்கின்றனர். ஏதேது! ஆந்திரர்களின் ஆசைக்கு ஓ எல்லை இல்லை போலிருக்கிறது.. ...தமிழர்களே! காலம் கடவா முன்னர் விழித்தெழுந்து உங்கள் உரிமையை நிலைநாட்டிக்கொள்ளுங்கள். எமது இலட்சியம் தமிழ் தெலுங்கு மலையாள கன்னட அரசுகளை உள்ளடக்கிய திராவிடக் கூட்டரசு அமைப்பதே. ஆனால் அதற்காகத் தமிழ் நிலத்தில் ஓர் அங்குலத்தையும் யாம் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்பதை அழுத்தந் திருத்தமாகச் சொல்லுங்கள்" என்று எழுதியிருந்தோம்.

'விடுதலை' இதழும் பெரியாரும் இந்தப் பிரச்சினையில் **இதுவரை** முழு மவுனம் சாதித்துவந்திருக்கின்றனர் என்றபோதிலும், **இந்த வாரம்**, சென்னை தமிழருடையதுதான் என்பதை வலியுறுத்தி எழுதியிருக்கின்றனர்.

எனவே, சென்னை, தமிழகத்தின் சொந்த சொத்து என்பதிலே தமிழர்களுக்கிடையே எந்தவிதக் கருத்து வேற்றுமையும் எள்முனையளவும் கிடையாது.

ஆகவேதான் கூறுகிறோம், ஆந்திரர்களில் பேராசை பிடித்த சிலர் அடாவடி பேசுகிறார்கள் என்ற காரணத்தை முன்னிட்டும, இந்தச் "சாக்கை" ஒரு காரணமாகக் காட்டி சென்னையை நேரடியாக தங்கள் சட்டைப் பைக்குள் திணித்துக்கொண்டால், சென்னையின் வளம் முழுவதும் தங்கள் பொக்கிஷத்தை நிரப்பும் என்ற சொந்த ஆசை அலைகளை முன்வைத்தும், மத்திய சர்க்கார், சென்னையை தமிழ் நாட்டிலிருந்து பிரிக்க முன் வருவார்களானால், தமிழர்கள் அத்தனை பேரும், சாதி வேற்றுமையின்றி, மத வேறுபாடின்றி, கட்சி பேதம் பாராது, மத்திய சர்க்காரின் கண்மூடித்தனமான போக்கை ஒழித்துக்கட்ட ஐக்கிய முன்னணி அமைத்து தங்கள் இறுதிமூச்சு உள்ளவரையில் போராடியே தீருவார்கள்.

மத்திய சர்க்காரே, வேண்டாம்! வேண்டாம் இந்த விஷப் பரீட்சை! ஆழந் தெரியாமல் காலை நுழைத்துக்கொண்டு பிறகு அவதிப்பட வேண்டாம்! தமிழர்கள் உள்ளத்தில் புரட்சிப் புயலை எழுப்பவேண்டாம். சென்னையை மட்டும் தமிழர்களிடமிருந்து பிரித்தெடுத்துவிட நீங்கள் எண்ணுவீர்களானால் அதனை, **காங்கிரசார்** உட்பட, அத்தனை தமிழர்களும் எதிர்த்தே தீருவார்கள் — வேண்டாம் இந்த விபரீத முயற்சி.

---

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

டா என்று சட்சை யோசித்துக் கொண்டேயிருந்தார்.

ஒரு நாள் ஜெங்கிஸ்கானும் சட்சையும் உலாவப் போனபோது அங்கே ஒரு ஆச்சரியமான மிருகத்தைக் கண்டார்கள். அது மான் போலிருந்தது. பச்சை நிறம், அதன் நெற்றியில் ஒரே ஒரு கொம்புதானிருந்தது.

'இது என்ன விபரீத ஜந்து?' என்று கேட்டார் ஜெங்கிஸ்கான்.

"இதுவா? இதன் பெயர் கியோதுவான் என்று சொல்லுவார்கள். இதற்கு இந்த உலகிலுள்ள எல்லா மொழிகளும் நன்கு தெரியும். மனிதர்கள் உயிரோடு அக்கம் பக்கத்தல் குடியிருந்தால்தான் இது மகிழ்ச்சியடையும்; சுற்றிலும் பிணக்காடாய் இருந்தால் இது மிகவும் துக்கப்படும். மன்னாதி மன்னா! இந்த மிருகம் இப்போது உன் கண் முன்பு தோன்றி நிற்பதன் உட்கருத்து என்னவாயிருக்கலாமென்று தோன்றுகிறது தெரியுமா? நீயும் உன் படையினரும் இதற்கு மேல் மனிதவர்க்கத்தைக் கொல்லக்கூடாதென்று எச்சரிக்கை செய்வதற்குத்தான் இது தோன்றிற்றென்று நினைக்கிறேன்" என்றார் சட்சை.

ஜெங்கிஸ்கானின் படிப்பற்ற மூளையில் இது மிகவும் தைத்தது. அவர் அந்தப் படையெடுப்பை அன்றே நிறுத்திவிட்டுப் பட்டாளத்தைத் திரும்ப அழைத்துக்கொண்டு மங்கோலியா திரும்பினார். இப்படியாக, திபேத் மனிதவர்க்கத்தை அக்காலத்தில் காப்பாற்றி விட்டார் சட்சை.

---

## இராதாமணாளன்—சந்திரா

### வாழ்க்கை ஒப்பந்தம்

★

வடார்க்காடு வந்தவாசிக்கடுத்த **கண்டிய நல்லூர்** கிராமத்தில், 4—9—49 ஞாயிறு அன்று **அறிஞர் அண்ணாதுரை** தலைமையில் திருமணம் நிகழும். **இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், மா. இளஞ்செழியன்** ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அன்பர்கள் அனைவரும் வந்திருந்து மணமக்களை வாழ்த்த வேண்டுகிறோம்.

தொடர்கதை :

# இளவரசி

[இராதாமனுளன்]

ஒன்பதாம் பகுதி
## காதற் கோயில்

[இதுவரை: சேரமன்னன் சேந்தனுடன் வேட்டைக்குச் சென்ற அவனது படைவீரன் தூயமணி, காட்டில், மன்னன் கட்டளைப்படி ஓர் மானைப் பிடிக்க ஓடுகிருன், வழியில் சேரன் ஒழிக என்று முணுமுணுத்துக் கொண்டிருக்கும் கிழவன் ஒருவனைக் கண்டு கோபத்தால் கன்னத்தில் அறைகிருன், கிழவனே புன்னகையுடன் தன் முதுகிலிருக்கும் பெரிய புண் ஒன்றைக் காட்டி "இதுதான் சேர நாட்டுவரலாறு" என்கிருன். திகைப்படைந்த தூயமணியை, கிழவன் இரகசியக் குகைக்கு, அழைத்துச் சென்று, தன் வரலாற்றைக் கூறுகிருன். அது, இது :

என் இளமையில், நான் பாண்டியன் அரசசபையில் இசைப் புலவனுக இருந்தபோது, பாண்டியன் மகள் மலர்க்கோதை என்னைக் காதலித்தாள். ஒருநாள் நாங்கள் இருவரும்தனியாகப் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது தன்தந்தை ஆரியப்பெண் ஒருத்தியின் மோக வலையில் சிக்கிக்கொண்டிருப்பதை வேதனையுடன் கூறினுள் கோதை. திடீரென்று எங்களுக்குப் பின்புறமிருந்து ஒருவாள் செடிமறைவிலிருந்து புறப்பட்டது, அய்யோ என்றலறினுள் இளவரசி. பிறகு...]

ஆள் தெரியாது வெளிவந்த வாளைக் கண்டு, பதறி எழுந்த அரசிளங் குமரியை அணைத்துக் கொண்டு, "யாரது?" என்று, நான் உரத்த குரலில், அதட்டிக் கேட்டேன்.

கலகலவென சிரிப்பொலி இலை மறைவிலிருந்து வந்தது! முன் நோக்கி வந்தவாள், பின்நோக்கிச் சென்றுவிட்டது! தாழைஇலையின் பின்பக்கமிருந்து இளவரசியின் தோழி இசையொலி எழுந்தாள்!

இவளுக்கா இப்படி நாம் அலறினேம் என்றெண்ணி வெட்கத்தோடு சிரித்தேன்.

"இசையொலி, இருவரையும் திடுக்கிடச் செய்துவிட்டாயே!" என்று நான் கூறி முடிப்பதற்குள், "திமிர் அதிகமாகிவிட்டதடி உனக்கு!" என்று மலர்க்கோதை அவளைக் கோபித்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டாள்!

"நானென்னஎம்மா அப்படிச் செய்துவிட்டேன்?"

"என்ன செய்துவிட்டாயா? நேரம்நேரம் தெரிகிறதாடி உனக்கு?"

"எனக்கா, தங்களுக்கா?"

"அதென்னடி?"

"இல்லாவிட்டால், இளவரசருக்கும் மன்னருக்குமிடையே தங்களைப்பற்றி பேச்சுப் போர், அரண்மனையில் நடந்துகொண்டிருக்கையில், இப்படித் தாங்கள்..."

"என்ன? அண்ணுவிற்கும் அப்பாவிற்கும் பேச்சுப்போரா? அதுவும் என்னைப்பற்றியா? இவரும் நானும்......"

"அதெல்லாம் ஒன்றுமில்லையம்மா!"

"இசையொலி, வேறு எதைக் குறித்து? சொல்லேன் விரைவாக!"

"சோழமன்னனிருக்கிருன் அல்லவா?......"

"ஆமாம்! ஆணவம் பிடித்தவன், அப்பாவிற்குக் கப்பம் கட்ட மறுத்த கசடன்!......"

"அது மட்டுமல்ல, பாண்டிய நாட்டின்மீது படை எடுத்துவரப் போகிறவன்!"

"இதனையும் நான் அறிவேன், இசையொலி!"

"அவனது எதிர்ப்பை நிறுத்த—'அவனது மனதைக் குளிரச்செய்ய அரசர் ஒரு புதிய திட்டம் தயாரித்திருக்கிருர்! அந்தத் திட்டத்தைத் தான் தங்கள் அண்ணு கண்டிக்கிருர்—மறுக்கிருர்!"

"புதிய திட்டமா? அது என்னடி, புரியவில்லை?"

"சோழனுக்கு ஒரு தம்பி இருக்கிருனும்! அவனுக்குத் தங்களைத் திருமணம் செய்துகொடுத்துவிட்டால்........."

"ஆ! அப்படியா எண்ணமிட்டிருக்கிருர் அப்பா? அண்ணு என்ன கூறினுர்?"

"போருக்கு அஞ்சி பெண் கொடுத்துப் பணிபவன்—கோழை, பேடி, கையாலாகாதவன் — என்றெல்லாம் கோபக் கனல் பறக்கப் பேசிக்கொண்டிருக்கிருர்!"

"பேச்சின் முடிவு?"

"அங்குப் போய்தான் அம்மா, நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்!"

மலர்க்கோதையின் முகத்தில் கோபமும் சோகமும் நிழலாடின! ஏக்கத்தோடு என்னைப் பார்த்தாள்! என்ன கூறுவது, எப்படிச் சாந்தப்படுத்துவது, எவ்விதத்தில் தைரிய மூட்டுவதென்ப தொன்றும் அந்நேரத்தில் விளங்கவில்லை!

இளவரசியின் எழில்மிக்க முகத்தில் கப்பிக்கொண்டிருந்த ஏக்கத்தின் மேகங்கள் சிறிது சிறிதாகக் கலைந்தன. வீரத்தின் ஒளி மெல்ல மெல்ல வீசத் தொடங்கியது!

மெதுவாக என் கையைப் பற்றினுள்! உணர்ச்சி பொங்கும் விழிகளால் என்னை நோக்கி, "முடிவு செய்துவிட்டோம், முடியாது இனி, நம்மை யாராலும் பிரிக்க!" என்று கூறிவிட்டு என் மார்பில் சாய்ந்தாள்!

சிறிது நேரத்திற்குப் பிறகு, இளவரசியும் இசையொலியும் சென்றுவிட்டார்கள். தவிக்கும் உள்ளத்தோடு நான் என் இல்லத்திற்குச் சென்றேன்.

இரவு!நீண்டநேரமாகியும் எனக்குத் தூக்கம் வரவில்லை! கவலைஎன் மனதைப் படாதபாடு படுத்திற்று

"எழிலின் எல்லை, குணத்தின் குன்று, பெண்மையின் பெட்டகம், அன்பின் ஊற்று — இளவரசி மலர்க்கோதை! மாட்டேன் ஆ... த்து என்றேன், மார்பில் சாய்ந்து கொஞ்சினுள்! இன்பம் காணு... எனக்கு இன்பத்தின் இருப்பிடம் இன்னது என்று காட்டினுள் மகிழ்ச்சி மடுவில் நீந்தச்செய்தாள் மனதைக்கொள்ளைக்கொண்டாள் மலருடலை எனக்குத் தந்தாள் தேன் கசியும் அந்தச் செவ்விதழ்கள் எனக்குத்தான் சொந்த... என்ருள்! ஆம் என்றெண்ணி, அ... மகிழ்ந்தேன்! என் உயிரோடு உ...

ராகக் கலந்து விட்ட அந்தக் காதற் களஞ்சியத்தையா நான் பிரிவது? முடியாது! என் இன்பவல்லி இன்னொருவனுக்கா சொந்தமாவது? சகிக்க மாட்டேன். காதல் வெற்றி பெறவேண்டும்! இல்லையேல் நாங்கள் இருவரும் செத்து மடியவேண்டும்! ......" படுத்துக்கொண்டிருந்த நான், இப்படி முணுமுணுத்துக் கொண்டிருந்தேன்! கண்களினின்றும் கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத் தோடியது! சுந்தரி குடியேறிய உள்ளத்தில் சோகப்புயல் சுழன்று சுழன்று அடித்துக்கொண்டிருந்தது!

காலடி சப்தம் கேட்டதும், திடுக்கிட்டேன்! கருப்புடை அணிந்த ஓர் உருவம் என்னை நாடி வந்தது! என் உடல் முழுவதும் ஓர் நடுக்கம் கண்டது. எழுந்து உட்கார்ந்தேன்! உருவம் அருகே வந்தது!

(தொடரும்)

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள், மன்னரின் படை கிளம்புவது கண்டனர். கையில் கிடைத்ததை எல்லாம் தூக்கினர், 1789 ஜூலை 14-ந் தேதி! போர்க்கோலம் பூண்ட மக்கள் எங்கே பாய்ந்தனர்? பாஸ்டில்! மன்னன் அடக்குமுறையைத் துவக்கத் துணிந்தான் என்று தெரிந்ததும் மக்கள் மனதிலே தோன்றிய முதல் எண்ணம், பாஸ்டில். பாஸ்டில்தானே, நம்மைப்போன்ற ஏழைகளை, சீமான்களின் எதேச் சாதிகாரத்தை எதிர்க்கத் துணிந்தவர்களைக், கொடுமை செய்யும் இடம்! நாமும் சிக்கிக்கொண்டால், அந்தப் பாழும் சிறைச்சாலைக்குத் தானே இழுத்துச் செல்லப்படுவோம். யாரால் சகிக்க முடியும் அந்த இம்சையை? அந்தோ! எவ்வளவு பேரை இம்சித்த இடம் அந்த பாஸ்டில்! ஒழிக! ஒழிக கொடுமை!!' என்று புரட்சி முழக்கமிட்டது. கிளம்பினர் மக்கள்! பாஸ்டிலை நோக்கிப் பாய்ந்தனர். அந்தப் புரட்சிப் படையின் முழக்கமென்ன? **வாழ்க வால்டேர்!** என்பதுதான்! பாஸ்டிலைத் தாக்கப் போனவர்கள் வால்டேர் வாழ்க! என்று முழக்க மிடுவானேன்? புரட்சிப் படைக்கு அந்தச் சமயத்திலே புத்தகம் எழுதியவனின் பெயர் ஏன் நினைவிற்கு வந்தது? வால்டேர், அந்தப் படைக்குத் தலைவனல்ல! ஆனால், 1789, ஜூலை 14-ந் தேதி கிளம்பிய புரட்சிப் படையின் முழக்கம், **வாழ்க வால்டேர்!** என்பதுதான்!! புரட்சிப் படையிலே வால்டேர் இல்லை! பிரான்சிலேயே இல்லை! அந்த மாவீரன் இறந்து பதினோரு வருஷங்களாய் விட்டன! 1778ல் வால்டேர் இறந்துவிட்டார் ஆனால் 1789 **ஜூலை 14-ல நடந்த புரட்சியின் போது, பாஸ்டில் சிறைக் கூடத்தை, மக்கள் தாக்கியபோது, வாழ்க வால்டேர் என்ற முழக்கமிட்டனர்.**

**வால்டேர் போர்வீரரல்ல. ஆனால், பொறுத்துப் பொறுத்து, தன்மான உணர்வு மரத்துப் போகும் நிலையிலே இருந்த மக்களைத்தட்டி எழுப்பியபுரட்சிக் காரன். பகுத்தறிவுத் தந்தை! பாமரரின் சக்தியை அவர்கள் உணரும்படி செய்த சிந்தனைச்சிற்பி!** பேனா முனை கொண்டு, அரண்மனைகளை; அஞ்ஞானிகளின் இருப்பிடங்களை, பழமையின் கோட்டைகளைத் தாக்கியவீரன். கேலியால், கண்டனத்தால், ஆராய்ச்சியால், அறிவுரையால், வைதீக மூடப்பனியைச் சிதறடித்த புது உலகத்தூதன்! வீரரின் வாளை விலைக்கு வாங்கமுடிந்தது, எதிர்த்து ஒடிக்க முடிந்தது, வஞ்சித்து வளைக்க முடிந்தது, வால்டேரின் பேனாவை, அடக்குமுறை, சிறை, நாடு கடத்தல் எனும் எவையினாலும், வளைக்கவும் முடியவில்லை, வால்டேர், தயாரித்த புரட்சிக் கருத்துக்கள் பொது மக்கள் உள்ளத்திலே குடி ஏறி, ஒன்று பத்து நூறாக வளர்ந்து வருவதை மக்களே அறிந்து கொள்ளவில்லை, மன்னன் எப்படி அறிவான் கக்கும் விநாடிக்கு முன்புவரை கந்தகக்குழம்பு உள்ளே கொதித்துக் கொண்டிருப்பது வெளியே தெரியாதபடி இருக்கும் எரிமலை போன்றிருந்தது மக்களின் மனம்.

புரட்சி வீறிட்டெழுந்ததும், தங்களுக்குத் தலைவன், எதிர்க்கும் சக்தியை இரத்தத்திலே கலக்க வைத்த காவலன், எதற்கும் அஞ்சாதே, பழய ஏடு என்பதற்காகத் தலை குனியாதே, மானத்தை மறவாதே, என்ற தத்துவங்களைத் தந்த தீரன் வால்டேரை, மக்கள் வாழ்த்தினர் மேலும், எந்தப் பாஸ்டிலியைத் தாக்கக் கிளம்பினரோ, அதே பாஸ்டிலியிலே, அநியாயமாகத் தள்ளப் பட்டு அவதிப்பட்டு, பல்லரை அரும்பாடுபட்டு விடுவித்தவர் அவர்என்பதை மக்கள் அறிவர். அதுமட்டுமா? அதே பயங்கரப் பாஸ்டிலியில் வால்டேரே அடைபட்டுக் கிடந்ததையும் அறிவர். பாரிஸ்நகர மக்கள் பதைத்தெழுந்து அந்தப் பயங்கர பாஸ்டிலிமீது பாய்ந்த அன்று பெற்றதைரியம், கொண்ட எழுச்சி, காட்டிய வீரம், வால்டேர் அளித்த அறிவுரையின் விளைவு! உண்மையிலே அவர்கள், அன்று பாஸ்டிலியைத் தகர்த்தது, வால்டேர் தயாரித்துக் கொடுத்த வெடிகுண்டின் துணையினால்தான்! ஆகவேதான் **வாழ்க வால்டேர்!** என்ற முழக்கம், பாஸ்டிலி பொடி பொடியான அன்று பாரிசில் கிளம்பிற்று! பாரிசில் மட்டுமா, பார் முழுவதுமேதான்!! அந்த ஜூலை 14க்தேதி மட்டுமா? ஜூலை 14க் தேதியிலே பாஸ்டிலி தினம் கொண்டாடப்படும் ஒவ்வொரு ஆண்டிலேயும்! அறிவுச் சுடரை ஆண்மையுடன் ஏந்திச் சென்ற அந்த அஞ்சா நெஞ்சன் காட்டிய பாதையிலே தான், பாஸ்டிலியைத் தகர்த்த புரட்சி வீரர்கள் அன்று சென்றனர், வால்டேர் தயாரித்துக் கொடுத்த வெடிகுண்டை வீசினர், வென்றனர். வாழ்க வால்டேர்!

**சவுக்கடி** வார இதழ் விலை 0-1-0

4—9—49 அன்று வெளிவரும்.

**முதல் இதழில்**

அரசியலிலே அம்பலம், காமராஜரின் நன்மூடித்தனம்,
அண்ணாவின் அரிய நோக்கம், பெரியாரின்
பேத்தல், இதய ஆசி (சிறுகதை)
மற்றும் பல.

ஏஜண்டுகள் தேவை: **சவுக்கடி ஆபீஸ்**, குடியாத்தம் N.A.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

'சுருக்' கென்று தைத்தது. அவள் மீது பழி சுமத்த ஆயிரத்தெட்டுக் காரணங்களைத் தொகுத்து வைத்திருந்தான் அவன். அவ்வளவும் தன் ஐயத்தால் தோன்றியவை என்பதையும் கூறி ஒப்புக்கொள்ளத் தயாராக இருந்தான். ஆனால் குற்ற மற்றவளாகச் செய்துவிட்டது அவளின் கபடமற்ற பேச்சு! என்ன இருந்தாலும் கணவனை விட்டுக் கொடுக்காமல் பேசும் இவளை நான்கு மாதமாக எவ்வளவு தூரம் அடிமை போல நடத்தி வந்தோம் என்பதை நினைக்கையில் கண்களில் நண்ணீர் கரை புரண்டு வழிந்தது.

முந்தானையால் அவன் முகத்தைத் துடைத்தபடி, "ஏன் வருந்துகிறீர்கள்? உங்களைப் பற்றித் தாழ்வாக நான் ஒன்றுமே நினைக்கவில்லை!" என்றாள் அவள்.

"இல்லை; நீ என்னை அடிமைப் படுத்தி ஆட்டி வைப்பதாக எண்ணிக்கொண்டேன்! அதனால் வந்த தொந்தரவுதான் இவ்வளவும்!" என்றான் அவன்.

"மன்னித்துக் கொள்ளுங்கள்! கணவனுக்கு அடிமை போலக் காட்டிக் கொள்ளாமலிருக்கத்தான் இந்தக் காலத்துப் பெண்கள் ஆசைப் படுகிறார்கள். ஆனால் உண்மையில் அப்படி நடப்பதில்லை!" என்று நாகம்மாள் உண்மை மன எண்ணத்தை உருக்கமாக வெளிப்படுத்திய போது, உணர்ச்சி ததும்பப் பின்னும் இறுக்கமாக அவளை யணைத்து "அட! என் கட்டழகே!" என்று கூறினான்.

மறு நாள் மாமி மகிழ்ச்சியுடன் புறப்பட்டாள்!

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"அடி பைத்தியமே! விதியாவது, மண்ணாங்கட்டியாவது. பஞ்சாங்கக்காரன் சொன்னதைக் கட்டியழும் பாழும் உலகமாயிருக்கிறது. அதற்கு விதி — கடவுள் என்ற பெயர்களை ஏன் இழுக்கிறாய்?",

"சரி. நான் சொல்கிறபடி செய்கிறீர்களா?" என்றாள்

"சரி" என்றேன்.

அவள் யோசனைப்படியே புரோகிதரைப் பார்த்துவிட்டு வந்தேன்.

மறு நாள் எங்க அத்தை எங்கள் வீட்டிற்கு ஓடோடியும் வந்தாள். என் தாயை அழைத்துத் "திருமணத்திற்கு நாள் முடிவு செய்யுங்கள்" என்றாள்.

"சாதகம் சரியில்லை என்று சொன்னாரே அவர்!"

'அவர்தான் வந்து சரியாயிருக்கிறது என்று சொன்னார். கணக்கில் தவறி விட்டதாம். வீட்டில் போய்ப் பார்த்ததில் கமலத்திற்கும் செவ்வாய் தோஷம் இருக்கிறது என்று வந்து சொன்னார். அதனால் முடிவு செய்து விடலாம்" என்றாள் என் அத்தை.

பேச்சு நடந்தது. ஆவணி இருபத்து ஒன்றில் மணம் என்று முடிவும் கட்டப் பட்டது.

ஐயர், வீட்டிற்குத் தேடி வந்து விட்டார். "வடிவேலு! வடிவேலு!" நான் வெளியில் வந்தேன்.

"என்ன! ஐயர்வாள்! சாதகம் உங்கள் இஷ்டம் போல் தானே? ஆக்கவும் அழிக்கவும் உபயோகப் படுகிறதே உங்கள் சரக்கு"

"ஆக்குவதும் அழிப்பதும் நாம் அல்ல, ஜீவ நாடி தம்பி. அப்போ ........நான் வரட்டுமா......?" என்று அசட்டுச் சிரிப்புடன் கேட்டார்.

"போய் வாருங்கள்! இதோ வைத்துக் கொள்ளுங்கள்" என்று இருபத்து ஐந்து ரூபாயைக் கொடுத்தேன்.

"பணமா! இதற்காக நான் வரவில்லை தம்பீ, சும்மா பாத்துட்டுப் போலாம்னு வந்தேன்"

"சரிதான் ஐயரே! பிடியுங்கள். இந்த இருபத்து ஐந்து இல்லாவிட்டால் சாதகக் கோளாறு எப்படித் தீரும்"

பணத்தை வாங்கிக் கொண்டு போய் விட்டார், ஐயர்.

திருமணம் முடிந்தது. சாதகக் கோளாறும் செவ்வாய் தோஷமும் எங்களை ஒன்றுமே செய்யவில்லை. அதற்குச் சான்று அதோ எங்கள் குழந்தை "புரட்சி"

---

(13-ம் பக்கத் தொடர்ச்சி

—கூடாதவர்கள்– முடியாதவர்கள் அத்தனைபேரும் அவர் அமைக்கும் முன்னணியில் ஒன்று கூடுகிறார்கள். அடுத்த சதுரங்க விளையாட்டில் வெட்டி எறியப்படும் வரையில் அந்தக் காய்கள்தாம் அவருடைய தளபதிகளும் தொண்டர்களும்! கடைசி காட்சி—இறுதிக் கட்டம்—தொடராத மூச்சு—திறக்கப்படும் இமைகளுக்குள்ளே மறைந்து போகும் கனவு!

மூடநம்பிக்கை—பகுத்தறிவு! இரண்டும் நேர்மாறான சொற்கள். அவருடைய சரக்கு மூடநம்பிக்கையாம், லேபில் பகுத்தறிவாம்! இந்த "பெரியார் பிராண்ட்" இனி நமக்குத் தேவையில்லை.

"எனக்குத் துரோகம் செய்தீர்கள்" என்கிறார் அவர்.

"இலட்சியத்துக்குத் துரோகம் செய்தீர் நீர்" என்கிறோம் நாம் அவரைப் பார்த்து.

"திருமணம் என்னுடைய சொந்த விஷயம்" என்கிறார் அவர். "உமக்குச் சொந்த விஷயம். ஆனால் எங்களுக்கு முகமூடியில் உலாவ வேண்டிய அவமானம்" என்கிறோம் நாம். "சிரம் அறுத்தல் வேந்தனுக்குச் சிறிய கதை, நமக்கெல்லாம் உயிரின் வாதை" என்று கவிஞர் பாரதிதாசன் ஏற்கனவே பாடி விட்டாரே!

பகுத்தறிவு வாதியின் நிழலைக் கண்டாலே அஞ்சி மறையும் பழமை இன்று பயமின்றி வெளியே வரத் தொடங்கிவிட்டது. நிகழ் காலம் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது. தாலமுத்து நடராஜன் வேலாயுதம் அழகிரிசாமி போன்றோர் நம்மைப் பார்த்துக் காரித் துப்புகின்றனர். துவண்ட இடத்திலிருந்து கதையைத்தொடருவோம். நம்பிக்கையோடு விட்டுப் போன பணியைத்தொடர்ந்துநடத்துவோம் வாரீர். கண்ணீர்த் துளிகளும், கண்டனக் கணைகளும் காரிய உலகிலே கால் வைக்கவேண்டும்.

"வீழ்ச்சியுறு தமிழகத்தில்
எழுச்சி வேண்டும்
விசையொடிந்த தேகத்தில்
வன்மை வேண்டும்
சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப்
பொறாமை தன்னைத்
தொகையாக எதிர்நிறுத்தித்
தூள் தூளாக்கும்
காழ்ச் சிந்தை மறச் செயல்கள்
அனைத்தும் வேண்டும்"

—கவியரசர் பாரதி தாசன்

* * *

"நெஞ்சே புரிந்ததா
என் சொற் பொருள்?"

# துவண்ட தொடர்கதை

[டி. கே. சீனிவாசன்]

"புதிய தொடர்கதை—அண்ணாவின் சிந்தனை ஓவியம்—இடையில் துவளாது!" வெளிவரப் போகிற தொடர்கதைக்குக்கொடுக்கப்பட்ட வினோதமான அறிவிப்பு—உறுதிமொழி! அந்த உறுதிமொழி. அப்போது தேவைப்பட்டது. அதற்குக் காரணம் திரையில் படம் ஓடிக்கொண்டிருக்கும் போதே முக்கியமான கட்டங்களில் இடையிடையே ரீல் அறுந்துபோவதைப் போல "ரங்கோன் ராதா" துவண்டது மட்டுமல்ல. தொடங்கப்பட்ட புதுத் தொடர்கதை ஏற்கனவே "விடுதலை" ஈரோட்டிலிருந்து தினசரியாக வெளிவந்தபோதே தொடர்கதையாகத் தொடங்கப்பட்டு தொடராமல் துவண்டது கூட! ஆனால் இத்தனை உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டுங்கூட அண்ணாவின் அந்த "என்வாழ்வு" இடையில் துவண்டு போனது!

கற்பனை உலகில் கதை தொடர்ந்து துவண்ட நிகழ்ச்சி இன்று நம் கவனத்துக்குவருகிறது. "இன்பத் திராவிடம்!"—புதுத் தொடர்கதை! காலஞ்சென்ற வெள்ளுடை வேந்தர் தியாகராயர் காலத்திலேயே கதையின் பெயர் நிர்ணயிக்கப் பட்டது. கதை அமைப்பை வகுத்துத் தரும் பணியை ஓமான் கடலில் உயிர்துறந்த மன்னன் பன்னீர் செல்வம் ஏற்றுக் கொண்டார். கதை எழுதும் பொறுப்பு சிந்தனையின் சிகரம், பகுத்தறிவின் பொக்கிஷம் பெரியார் ஈ. வே. ராமசாமியிடம் ஒப்படைக்கப் பட்டது. கதை தொடங்கிற்று, "இடையில் துவளாது!" என்ற நம்பிக்கையோடு!

இளைஞர் பலர்அந்தக் கதையால் நாடு அடையப் போகும் பலனைக் கருதி பலரும் படித்துத் தெளிவு பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தால் தங்கள் வாழ்வைப் பலியிட்டுக்கொண்டு மக்களைப் படிக்கத் தூண்டினர். அலுத்துக் களைத்தாலும் அயர்ந்து சோர்ந்தாலும் மனந் தளராமல் காடுமேடுகள் சுற்றி கதையைப் பற்றிப் பிரச்சாரம் செய்தனர்.

"படித்துப் பாருங்கள்கதையை! பகுத்தறிவுப் பலகணியைத் திறந்து மகிழ்ச்சிக் கதிரவன் ஒளி உள்ளே விழச் செய்ய ஒரு தூண்டுகோல்! வெந்து நொந்தவர்கள், வேதனை மிகுந்தவர்கள், அடிமைப் பட்டவர்கள், அன்னக் காவடிகள் விடுதலை பெற வெளிவரும் விவேகம்நிறைந்தவிளக்கம்"

கண்ணீரும் செந்நீரும் சிந்தி, நா வறள உடல் அலுக்க பாடுபட்டுழைத்தவர்கள், கதையைப் பற்றி செய்த பிரச்சாரந்தான் மேலே சொன்னது. தம்மையொத்த தோழர்களுடைய இதழ்களில் மலரும் புன்னகை தரும் போதைகொடுக்குந் தெம்புதான் அவர்களுக்குக் கிடைத்த மன ஆறுதல்!

வேகமும்விறுவிறுப்பும் நிறைந்த அந்தக்கதை அழகழகான படங்களோடு அச்சிலே வெளி வந்தது. "பாராட்டும்பழமை,மூடநம்பிக்கையெல்லாம் ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்," என்று கருணாநிதிகள் கதையைப் பற்றிக் கவிதைகள் தீட்டினர். ஊர்ச் சாவடிகளில், ஓடும் இரயில் வண்டிகளில், பொது மேடைகளில், நாடக அரங்குகளில், எங்கெங்கேமக்கள் கூடுகிறார்களோ அங்கங் கெல்லாம் கதையைப் பற்றி சுடச்சுட வாதங்கள் நடைபெற்றன.

"எழில் ததும்பத் ததும்ப, எழில் ததும்பிய காரணத்தால் இன்ப உணர்ச்சி பொங்கி வழிய உயிர் துறந்த கன்னியர் எத்தனைபேர்?"

—நடிகவேள் M. R. ராதா

"வயதான கிழவருக்கு உடல் உணர்ச்சிகள் இருக்குமா? இதைத் தெரிந்து அவர்கைப்பிடித்த கன்னியும் உடல் உணர்ச்சியைக் கட்டுப் படுத்திக் கொண்டால் நிலை சரியாகப் போய்விடுமே!"

—எவரோ ஒரு அனாமதேயம்

"பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல், பசியாத நல்வயிறு பார்த்ததுண்டா?"

—கவிஞர் பாரதிதாசன்

கதையில் வந்த ஒரு கட்டத்தைப் பற்றி இப்படித்தான் வாசகர்கள் பேசிக் கொண்டனர். ஆனால் கதாசிரியருக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. திடீரென்று கதைப் போக்கை மாற்றினார். எதிர்பார்த்ததற்கு மாறாக மட்டுமல்ல, முன்னுக்குப் பின் முரணாக, முதலில் எழுதியதற்கு முற்றிலும் மாறாக கதையை எழுத ஆரம்பித்தார்! "அமைத்துக் கொடுத்த கதையை அலங்கோலப் படுத்திவிட்டீர்களே" என்று கேட்டனர் கதையைப் பரப்ப காடுமேடு சுற்றியவர்கள்.

"நான்தானே ஆசிரியர். என்னிஷ்டம்போல கதையை மாற்ற எனக்கு உரிமையில்லையா?" என்று கேட்கிறார் ஆசிரியர்.

"நீர்தான் ஆசிரியர் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் முன்னுக்குப் பின் முரணாக எழுதி விட்டீர்களே. இராவணன் தூக்கிச் சென்றபோது சீதை கழற்றி எறிந்த ஆபரணங்கள் மறுபடியும் அசோகவனத்தில் அனுமான் சந்தித்தபோது அவளுடம்பில் முளைத்திருந்தன என்று கம்பன் எழுதிய போது கண்டித்தோமே. அசோக வனத்தில் சீதையின் உடலில் ஆபரணங்கள் இருந்திருந்தால் அவளிருந்த இடம் இராவணனுடைய அம்சதூளிகா மஞ்சமாகத்தான் இருந்திருக்கும், என்று சொன்னோமே. இப்போது கம்பனோடு வம்பு செய்த நீர் தவறு செய்யலாமா?" என்று கேட்கிறோம்.

என்னென்னவோ அற்புதங்களை செய்து காண்பிக்கும் என்ற நம்பிக்கையால் கதையைப் படிக்கத் தூண்டினோம். மக்களும் படித்து வந்தார்கள். ஆனால் கதை நல்ல சமயத்தில் கெட்டுவிட்டது. எப்படி எப்படியோ மக்களிடம் பேசினோமே! இனி எரிந்து சாம்பலாகிய பிணம், மறைந்துபோன இளமை, காய்ந்து சருகான மலர் இவைகளைப் பற்றிக் கவலைப்படுவதில் பலனுமில்லை, அர்த்தமுமில்லை, கதைப் போக்கு மாறாமல் தொடர்ந்து எழுதும் ஆற்றல் நமக்குண்டு. எங்கோ வெகுதூரத்தில்—அதோ!—துருவ நட்சத்திரம் தெரிகிறது. அதை மூடிமறைக்க கதையின் உரிமைகளை எப்படியோ பதிவுசெய்து கொண்டவர் ஆள் பலம், பணபலம், பத்திரிகை பலம் மூன்றையும் திரட்டி முயற்சி செய்கிறார். சிந்திக்கத் தெரியாதவர்கள்

(12-ம் பக்கம் பார்க்க)

# அன்று வெளிவந்த சிறுகதை!

[சென்ற இதழ் தொடர்ச்சி]

[சென்ற இதழில்: 1942-ம் ஆண்டு! சென்னை! ஜப்பானிய விமானங்களின் கைவரிசை! அனைவரும் பயந்துகொண்டு பலப்பல வெளியூர்களுக்கு மூட்டை முடிச்சுகளுடன் பயணமாயினர்! நாங்களும் அப்படிப் புறப்பட்டவர்கள்தாம். நாங்கள் சென்று தங்கிய ஊர் திருப்பதி. எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் ஒரு வயோதிகப் பார்ப்பனர் குடியிருப்பு. அந்த வயோதிகர் 16 வயது மங்கையுடன் தினந்தோறும் உலாவச் செல்வது வழக்கம். நான் அந்த மங்கையை அவருடைய மகள் என்று கருதினேன். என் தங்கை நீலா, பேத்தி என்று கருதினாள். ஆனால் ....திடீரென ஒரு நாள்... அந்தப் பெண் அவருடைய மனைவி என்று தெரிந்தது.........திடுக்கிட்டோம்...பிறகு:]

அப்படியும் இப்படியுமாகத் திருப்பதியில் ஓர் ஆண்டு கழித்துவிட்டோம். 1943 ஏப்ரலில், ஜப்பானிய படையெடுப்பின் வேகம் சற்றுக் குறையவே, சென்னை சர்க்கார் தமது காரியாலயங்களைச் சென்னைக்குத் திருப்பி அழைத்துக் கொண்டார்கள். ஆகவே, பொது மக்களும் நம்பிக்கை பெற்று ஒவ்வொரு குடும்பமாகச் சென்னைக்குத் திரும்பத் தொடங்கினார்கள். நாங்களும் சென்னைக்குப் போக வேண்டிய ஆயத்தங்கள் செய்தோம். என்னை விட்டுப் பிரிய முடியாமல் அந்த எதிர்வீட்டுப் பெண் கதறின கதறல் இப்போது நினைத்துக் கொண்டாலும் என் நெஞ்சத்தை நீராய் உருக்குகின்றது. சென்னைக்கு வந்தால் கட்டாயம் என்னை வந்து பார்க்கும்படி அவளை வேண்டிக்கொண்டேன். குமுறல்களுக்கிடையே "ஆகட்டும்" என்றாள். என் விலாசத்தையும் வாங்கிக்கொண்டாள். நானும் பிரியாவிடை பெற்றுக்கொண்டு பிரிந்தேன்.

"ஆகட்டும்" என்று அவள் எந்த வேளையில் சொன்னாளோ, அந்த சொல் ஆறுமாதத்துக்கெல்லாம் பலித்துவிட்டது. ஆனால், ஐயோ, பரிதாபமே, இப்படியா பலிக்கவேண்டும்! ஒரு நாள் பகல் மூன்று மணிக்கு அவள் திடீரென்று எங்கள் வீட்டில் தோன்றினாள். வந்ததும் வராததுமாய் என்னை ஒரு அறைக்கு அழைத்துச் சென்று, என்னை உட்காரவைத்து என் மடியில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள். நெடு நேரமாகியும் ஓயவில்லை. அவளை நான் மெதுவாகத் தேற்றி, "என்ன சங்கதி சொல், அம்மா, என்னாலான உதவியைச் செய்கிறேன்" என்று உறுதி கூறினேன்.

"ஐயோ அக்கா, யாராலும் உதவி செய்ய முடியாதபடி அவர் மோசம் செய்து போய்விட்டாரே" என்று பிரலாபித்தாள். என் நெஞ்சம் 'திக்' என்றது, ஒரு வேளை அந்தப் பார்ப்பனர் இறந்து ........சே! அப்படி இராது. அப்பெண்ணின் கழுத்தில் மங்கலநூல் இருக்கிறது. நெற்றியில் குங்குமம் மிளிர்கிறது. கூந்தலில் பூ முடித்திருக்கிறாள். கால் விரல்களில் மெட்டி விளங்குகிறது.

பிறகு அவள் விக்கிக்கொண்டும் தேம்பிக்கொண்டும் விம்மிக்கொண்டும் சொன்ன குளறுபடியான சொற்களின் கருத்து இதுதான்.

நாங்கள் திருப்பதியிலிருந்து வந்துவிட்ட பிறகு, அவருடைய தொல்லை அவளால் பொறுக்க முடியாமற் போய்விட்டது. அவர் கூப்பிட்டபோதெல்லாம் அவள் வருவதில்லை என்பதற்காகவும், அப்படி வந்தாலும் அவருக்குத் தக்கபடி அலங்காரம் செய்துகொள்வதில்லையென்பதற்காகவும் அவர் அவளைத் துன்புறுத்த ஆரம்பித்தார். வழக்கப்படி குறைகளைக் கொட்டிக் கொள்ள எதிர் வீட்டில் நானும் இல்லாதபடியால், அவளுடைய நெஞ்சம் சிற்சில சமயங்களில் வெடித்துவிடுவதுபோலிருக்கும். அப் பார்ப்பனர் புதிய புதிய காயகற்ப முறைகளைக் கையாண்டு பார்த்தார். எங்கெங்கிருந்தோ மருந்துகளையும், லேகியங்களையும், டானிக்குகளையும் ஷர்பத்துகளையும் ஹல்வாக்களையும் தருவித்துச் சாப்பிட்டார். கொழுப்பு நிறைந்த பண்டங்களை அருந்தினார். இதனாலெல்லாம் அவருக்கு அஜீரணம் மேலிட்டு நோய்வாய்ப் பட்டார். வரவர அவருக்கு முன் கோபம் அதிகமாயிற்று,

இந்தச் சீர்கேடான நிலையில் அவருடைய மகன் பி. ஏ, வுக்கு எழுதிவிட்டு, திருப்பதிக்கு வந்தான். அவன் வேறு எங்குதான் போவான் பாவம். உடனே அவன் நடமாட்டங்களுக்குக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினார். அவன் சமையலறைப் பக்கம் எட்டிப்பார்க்கவே கூடாது வயதில் தன்னைவிடச் சிறிய சிற்றன்னையுடன் பேசக்கூடாது. இருபது வயதுள்ள அவன் தனக்கு இயல்பான அலங்காரங்கள் செய்துகொண்டால் அவருக்குச் சந்தேகம் பிறக்கும். அவன் மீது எரிந்து விழுவார்.

அந்தப் பையன் மகா உத்தமன்; ஒரு பாவமுமறியான். அவளும் அப்படியே! ஒரு நாள் அவளுக்குக் காலில் காயம் பட்டுவிட்டதென்று வேலைக்காரி மூலமாக அறிந்து, அவன் எங்கேயோ ஒரு 'டிங்க்சர் அயடின்' புட்டியைப்பெற்று, சமயலறையில் அவளிடம் கொண்டு போய்க்கொடுத்தான். தற்செயலாக அங்கே வந்த அவள் கணவர் அதைப் பார்த்துவிட்டார். ஒரு பேரிரைச்சல் போட்டார். நீங்க ரெண்டுபேரும் எனக்கு விஷம் கொடுக்கச் சதி

செய்யறிங்களா" என்று கத்தினார். கல கலவென்று சிரித்தார். அடுத்த கணம் அவருக்கு புத்தி மாறிவிட்டது. "விஷம் குடுக்கறாங்க" என்பதே அவர் சதா ஜபிக்கும் மந்திரமாய்விட்டது. அவருக்குப் பைத்தியம் முற்றி எல்லாரையும் அடிப்பதும் உதைப்பதும் கடிப்பதும், சாமான்களை உடைப்பதுமாக இருக்கவே, அவர் இப்போது சென்னைக் கீழ்ப்பாக்கத்திலுள்ள மன நோய் மருத்துவகத்தில் இருக்கிறார். அவள் அவரைப் பார்த்து இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. அவர் தமது மனைவியையும் மகளையும் கண்டால் அவர் நோய் முற்றிவிடுமாகையால், அவர்கள் அவரைப் பார்க்கக்கூடாது என்று மருத்துவர் கட்டளை இட்டிருக்கிறார். இவ்வாறு அந்தப் பெண் தனது துன்பக் கதையை முடித்தாள்,

"இப்போது என்னை என்ன செய்யச் சொல்கிறாயம்மா" என்று நான் பரிவுடன் கேட்டேன்.

"வேறொன்றுமில்லை, என்னுடன் மருத்துவகத்திற்கு வாருங்கள். உங்களைக் கண்டால் அவருக்குக் கெடுதல் ஒன்றும் சம்பவிக்காது. உங்கள் பின்னால் ஒளிந்து கொண்டு நான் அவரை ஒருமுறை பார்த்துவிடுகிறேன். எனக்கு அதனால் மனச்சாந்தி ஏற்படும்" என்று அவள் கெஞ்சினாள்.

முதலில் இதை நான் விரும்பவில்லையாயினும், அவருடைய வற்புறுத்தலின்பேரில் இசைந்தேன். மருத்துவகத்திற்குச் சென்றேன். அவள் என் பின்னாலேயே ஒளிந்து கொண்டுவந்தாள்.

"இதுதான் நீங்க பார்க்கவந்த கேஸ்" என்று சேவகர்கள் ஒருவரைக் கொண்டுவந்து என்முன் (சரியாகச் சொன்னால், எங்கள் முன்) நிறுத்தினார்கள். நான் முதலில் நம்பவில்லை. "நாங்கள் பார்க்க வந்தது இவரல்ல" என்று சொல்ல நான் வாயெடுக்கும்போது, என் பின்னாலிருந்த அவள் "இவர்தான், அக்கா" என்று என்னை ரகசியமாகச் சீண்டினாள்.

ஆகா, எவ்வளவு வேற்றுமை! நான் இவ்வரலாற்றின் ஆரம்பத்தில் வருணித்த அலங்கார ஆடவன் எங்கே! இப்போது காணும் பித்தம் பிடித்தத் தொண்டு கிழம் எங்கே! தும்பைப் பூப்போல் வெளுத்த தலை மயிர், குழிவிழுந்த குறிகோளில்லாத கண்கள்; சுருக்கங்களுடன் கூடிய முகம். கொக்கின் சிறகுபோல் நரைத்த தாடி; ஒரு பல்கூட இல்லாத பொக்கைவாய்; கூன் விழுந்த முதுகு; தடி ஊன்றித் தள்ளாடும் நடை; "விஷம் குடுக்குறாங்கோ" என்னும் மந்திர ஜபம்!

"ஓ, அதெல்லாம் வெறும் 'மேக் அப்' அக்கா!' என்று நீலா முன்பு சொன்னது பளிச்சென்று என் நினைவுக்கு வந்தது. ஒரு கணம் வியந்தேன்.

* * *

பெண்களின் நலனுக்காகவும், விடுதலைக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் எத்தனையோ சீர்திருத்தங்கள் இக்காலத்தில் பொது மேடைகளிலும் சட்டசபைகளிலும் பேசப்படுகின்றன. சில சட்டங்களும் பிறந்திருக்கின்றன. வேசித்தொழில் தடை, கோயில்களில் தேவதாசி முறை ஒழிப்பு, பெண்கள் சொத்துரிமை, விவாக விடுதலை உரிமை, கலப்பு மணத்திற்கு அனுமதி, குழந்தை மணத்தடை, இருதார மணத்தடை, கைம்பெண் மறுமண அனுமதி—என்று இத்துறைகளிலெல்லாம் சட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் பதினாறு வயதுக்குமரியை அறுபது வயதுக் கிழவன் மணப்பதைத் தடுக்கும் சட்டம் இதுகாறும் ஏற்படவில்லை. இது விஷயத்தில் காலந்தாழ்த்துவது பெரிதும் அநியாயம், அக்கிரமம், கொடுமையென்று சொல்லுவேன்.

ஒருவனும் ஒருத்தியும் எந்த வயதிலாகிலும் மணஞ் செய்துகொள்ளட்டும். ஏனெனில் சில முதியோர் உடலின்பத்துக்காக வல்லாமல் வெறும் பேச்சுத் துணைக்காகவே (Companionate marriage) மணஞ் செய்துகொள்ள விரும்புவார்கள். ஆனால், **ஒருவனுக்கும் ஒருத்திக்கும் மணமாகும்போது அவர்களுக்குள்ள வயது வேற்றுமை ஐந்துக்கு மேற்படக்கூடாது** என்று சட்டமியற்றுவது மிக்க அவசியமும் அவசரமானதுமாகும்.

இத்தகைய ஒரு சட்டத்தினால், மனநோய் மருத்துவகங்களில் கால் பாகம் காலியாய்விடும்; எத்தனையோ சந்தேகங்களுக்கு இடமில்லாமல் போகும்; பல கொலைகளும் தற்கொலைகளும் தவிர்க்கப்படும்; ஒரு பாவமுமறியா எத்தனையோ இளஞ் சிறுமிகளின் கண்ணீர் துடைக்கப்படும்.

* * *

**ஆசிரியர் குறிப்பு:**

வயதான முதியவர்கள் இளங்குமரிகளை மணந்துகொள்வது எவ்வளவு பெருங்கொடுமை என்பதை அழகுற எடுத்துக்காட்டி, அதை சட்ட பூர்வமாகவே தடுத்தாகவேண்டும் என்று வலியுறுத்தும் இந்த அழகிய சிறுகதை இப்போது, பெரியார் திருமணத்திற்குப் பிறகு, புதிதாக எழுதப்பட்டதல்ல. 1947 ஆகஸ்டு மாதம் வெளியான "**பூந்தோட்டம்**" இதழிலே வந்திருப்பது தான் இது. திராவிடர் கழக இலட்சியங்களைச் சிறந்தமுறையில் பரப்பி வந்த அரியதோர் திங்கள் வெளியீடு, "**பூந்தோட்டம்**" அந்தப் "பூந்தோட்டம்"தான் **தோழியர் வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார்** அவர்களால் தீட்டப்பட்ட இந்த இனிய சிறு கதையை வெளியிட்டு பொருந்தா மணத்தின் கொடுமைகளை நாடறியச் செய்திருக்கிறது அன்று! பெரியார் திருமணம் போன்ற திருமணங்களை நாம் எங்கே கண்டித்திருக்கிறோம் என்று இன்று கூறுகிறாரே "விடுதலை"யார் அவர் இந்தச் சிறு கதையை வெளியிட்டிருக்கும் ஏடு, திராவிடர் கழக ஏடுதான் என்பதை நெஞ்சில் நிறுத்திக் கொள்வாரானால் மீண்டும் ஒருமுறை அப்படிக்கூறத் துணியமாட்டார். எடுத்துப் படிக்கட்டும் அவர் இந்தப் "பூந்தோட்ட" இதழைப் படித்துவிட்டு, தாம் கூறுவது எவ்வளவு சொத்தையான வாதம் என்பதைத் தெரிந்து கொள்ளட்டும்.

## "தமிழரசி" தோற்றம்

முடிதிருத்தும் தொழிலாளர் சங்கத் தலைவர் சென்னைத் தோழர் சந்திரன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியாருக்கு 25-6-49 அன்று பிறந்த பெண் குழந்தைக்கு 'தமிழரசி' என்று பெயர் சூட்டப்பட்டதன் நினைவாக, 'போர்வா'ளுக்கு ரூ. 1. நன்கொடை அளிக்கப்பட்டது. [நன்றி: ஆசிரியர்.]

# ஈ லியூ சட்சை!

★

## வரலாற்றுத் துணுக்கு

★

ஈ லியு சட்சை ஒரு சீனர், அறிவாளி, ஞானி, வைத்தியம் செய்யத் தெரிந்தவர். வானத்திலே நக்ஷத்திரங்களைக் கொண்டு காலங்கணிக்கத் தெரிந்தவர். வான வெளி ஆராய்ச்சி மட்டுமின்றி, பூமி நிலப் பரப்பிலும் இந்த தேசத்துக்குப் பிறகு இந்த தேசம், இந்தப் பட்டினம் இந்த திசையிலிவ்வளவு தூரத்திலிருக்கிறது என்பனபோன்றவிவரங்களை மனனம் செய்திருந்தவர். இந்தமாதிரி 'நடக்கும் புத்தகசாலை' யாயிருந்த இவர் ஒரு மகா பராக்கிரமசாலிக்கு உதவியாளராக ஏற்பட்டார்!

அந்த பராக்கிரமசாலியின் பெயர் ஜெங்கிஸ்கான். தமிழ் நாட்டிலே தத்தாரி என்ற வழக்குச் சொல்லொன்று இருக்கிறதே, அந்த வார்த்தையின் மூலபுருஷன் பிரசித்தி பெற்ற ஜெங்கிஸ்கான் தான். திக்கு திசைகளைப் பற்றி கவலையின்றி நாடு நாடாக ஓடி வீரச் செயல் ஆற்றிய தத்தாரி தேசத்தான் ஜெங்கிஸ்கான்.

### 4000 மைல் நீள சாம்ராஜ்யம்

ஜெங்கிஸ்கான் மொங்கோல் வம்சத்தினர். அவர்தம் பேரப்பிள்ளைக்குப் பேரப்பிள்ளையான பாபர் இந்தியாவைப் படையெடுத்து இங்கே மொகல் வம்சத்தின் முதல் அரசனாக ஆனார். (மொங்கோல் என்ற பதம்தான் தப்பாக மொகல் என்று சொல்லப்பட்டு அதுவே சரியான வார்த்தையாக இப்போது மதிக்கப் படுகிறது)

ஜெங்கிஸ்கான் கிழக்கே சீனாவின் பெரும் பகுதியையும் ஜெயித்து மேற்கே ரஷ்யா முழுவதையும் வென்று அரேபியாவிலும் கொடி போட்டவர். அவர் பிள்ளை யொருவர் ஐரோப்பாவில் போலந்தையும் அடிமையாக்கிக் கொண்டு ஹங்கேரியிலும் வெற்றிக் கொடி போட்டவர். பிரான்சும் மங்கோலிய சாம்ராஜ்யத்துக்கு அடி பணிந்தது. கிழக்கே சுமத்திரா, ஜாவாகூட மங்கோலியர் ஆட்சிக்குள் பிற்காலத்தில் அகப்பட்டது. மங்கோலிய சாம்ராஜ்யத்தின் பரந்த விஸ்தீரணத்தை மனதால் ஊகித்தாலே மகா ஆச்சரியமாக இருக்கும். கிழக்கே சீனாவிலிருந்து மேற்கே மத்திய ஐரோப்பா வரை! அடேயப்பா! எவ்வளவு பெரிய சாம்ராஜ்யம்!

அப்பேர்ப்பட்ட வீர வம்சத்தின் பிதா ஜெங்கிஸ்கான். அவருக்கு அருந்துணைவராக அருகிலிருந்து யோசனை கூறிக்கொண்டிருந்த மதிமந்திரி ஈ லியு சட்சை.

ஜெங்கிஸ்கானுக்கு எந்த மதத்தாரிடமும் துவேஷம் கிடையாது. பவுத்தர்கள், கிறிஸ்தவர்கள், முசல்மான்கள் இப்படிப் பல சமயத்தினரும் அவரது படையிலிருந்தார்கள். எல்லாச் சமயத்தையும் கௌரவிக்கும் அந்த நல்லெண்ணத்தை ஊட்டியவர் ஈ லியு சட்சைதான்.

### அறிவாளிக்கு என்ன வேலை?

சட்சையினுடைய மேதையை விவரிக்கும் கதைகள் பல உண்டு. அவருக்கு ஜெங்கிஸ்கானிடமிருந்த செல்வாக்கோ அபாரம். அந்தச் செல்வாக்கை ஒரு சின்னக் காரியத்துக்குக்கூட, சட்சை துஷ் பிரயோகம் செய்ததில்லையாம். வில்லெடுக்கவோ, வாளைத் தூக்கவோ துளிக்கூட அறியாத இந்த ஆள், மன்னாதி மன்னனின் பட்டாளத்தோடு வந்து கொண்டிருந்தது பல வீரர்களுக்குப் பிடிக்கவில்லையாம். ஜெங்கிஸ்கான் 3000 மைல் பிரயாணம் செய்து போர் நடத்துகின்ற சந்தர்ப்பங்களிலும் சட்சையை மட்டும் கூட அழைத்துக் கொண்டு போனது பட்டாளத்திலிருந்த இதர வீரர்களுக்குப் பொறாமையை உண்டாக்கிற்றும்.

"வீரர்கள் நிறைந்த எங்களோடே நீ ஒரு புஸ்தகப் பித்துக் கொள்ளி ஏண்டா வந்து கொண்டிருக்கிறாய்?" என்று ஒரு வீரன் சட்சையைக் கேட்டு விட்டான்.

சட்சை சொன்னார்: 'நீங்கள் வீரர்கள்தான். ஆனால் உங்களுக்கு வில் பண்ணித் தருகிறானே, அவன் தச்சன். இப்படி நீங்கள் போரிட்டு ராஜ்யம் சேகரிக்கிறீர்களே அந்த ராஜ்யத்தைப் பிறகு நிர்வகிக்க வேணுமே, அது எப்படி? அப்போது வேண்டியவன் படிப்பாளி. அது ஞாபகமிருக்கட்டும்" என்றாராம்.

ஜெங்கிஸ்கான் ஒரு தேசத்தைப் போய்ப் படையெடுத்து வெல்கிறாரென்றால், அந்தத் தேசத்திலுள்ள விலை மிகுந்த பொருள்களை எல்லாம் வீரர்கள் சூறையாடிப் பங்கு போட்டுக்கொள்வார்கள். விலையுயர்ந்த ரத்தினங்கள், ரத்தினக் கம்பளங்கள், தங்க வெள்ளி நகைகள், தங்கச் சிம்மாசனங்கள், அழகான பெண்கள் எல்லாவற்றையுமே அந்தத் தத்தாரி வீரர்கள் கொண்டுபோய் விடுவார்கள். அப்படிப் படையெடுத்த நாடுகளிலே சட்சை விரும்பிய வஸ்துக்களோ வேறு. புத்தகங்கள், வான சாஸ்திரக்கருவிகள், மூலிகை நாற்றுக்கள், தேசத்தின் பிளான்கள் இவற்றையே அவர் எடுத்து எடுத்துச் சேர்த்துக் கொண்டிருந்தார்.

அவருடைய அறிவு மிகுதிக்காகவே, ஜெங்கிஸ்கான், அவரை, தம் பக்கத்தில் எப்போதும் வைத்துக் கொண்டிருந்தார்.

### முரடரிடையே தயாளு

ஹிமாலய மலையின் வடக்குச் சார்போரத்தில் ஜெங்கிஸ்கானின் பாளையம் வந்திறங்கியிருந்தது. அங்குள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் பயங்கரமாகத் தத்தாரி வீரர்கள் சூறையாடினார். கிராமவாசிகளையெல்லாம் ஹதம் செய்தனர். இந்த அளவுகடந்த அக்ரமத்தையும் முரட்டுத்தனத்தையும் நிறுத்துவதற்கு வழியேதேனுமுண்

(9-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ila. cheliyan B A. (Hons)